Bijmané

Louis 1. Bij 11

Nov 1928.

JL

R673m211, N28

N28.1.11.

187125

ஓம்

# சித்தாந்தம்

“ எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே ”

10 DEC ... MADR

| மலர். க | விபவ ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1928 ஆம் நவம்பர் மீ | இதழ். கக |
|---|---|---|

உள்ளுறை

| உள்ளுறை | | பக்கம் |
|---|---|---|
| குயில் ... ... ... | பத்திராசிரியர் மணி. திருநாவுக்கரசுமுதலியார் | 241 |
| அத்துவிதம் ... ... | மணவழகு | 242 |
| உயிரின் தன்மை ... ... | J. M. N. | 244 |
| சிவமும் சத்தியும் ... ... | D. கோபால செட்டியார் முன் “நியு ரிபார்மர்” பத்திராதிபர் | 247 |
| குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை | R.M. அண்ணாமலைசெட்டியார் | 249 |
| ஐந்து எழுத்து உண்மை ... ... | பண்டிதர் கி. குப்புச்சாமி முதலியார் | 253 |
| சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும் ... | காழி. சிவ. கண்ணுசாமி, B. A. | 257 |
| “ நாட்டின் முன்னேற்றமும் நமது சமயமும் ”. | வித்துவான் - A. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள் | 259 |
| செய்தித் திரட்டு ... ... | | 263 |
| வரவு செலவு கணக்கு ... ... | | 264 |

பத்திராசிரியர்

மணி. திருநாவுக்கரசு முதலியார்,
ஆசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை.

உதவிப் பத்திராசிரியர்
வித்துவான்
பாரிப்பாக்கம் - கண்ணப்ப முதலியார்.

சைவ சித்தாந்த மகாசமாஜ காரியாலயம்,
92, வரதா முத்தையப்பன் தெரு,
சென்னை.

1928

# திருக்குறள்

பதம் பிரித்த மூலமும் தெளிய எழுதிய க...

நல்ல கிளேஸ் காகிதம், சுத்தமான பதிப்பு ; சும

பிரதி 1-க்கு விலை

| | 1928ஞ் நவம்பர்மீ 30உக்குள் முன் பண மனுப்புவோருக்கு | புத்தகம் முடிந்த பிறகு | தபால் செலவு |
|---|---|---|---|
| ராப்பர் கட்டடம் | 0—4—0 | 0—8—0 | 0—1—6 |
| காலிகோ ,, | 0—8—0 | 0-12—0 | 0—2—0 |

தபால் செலவு சேர்த்து முன்பண மனுப்பவேண்டும்.

பலர் சேர்ந்து ரயில் பார்சலில் வரவழைத்துக் கொள்ளின் செலவு மிச்சமாகும்.

ஈரநெஞ்சமுடைய பெருந் திருவாளர்கள் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் வாங்கிப் பள்ளி மாணவர்களுக்கு நன்கொடையளிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அம்மாதிரி இன்னும் பல தனவான்களை எதிர் பார்க்கின்றோம்.

தமிழ் நூற்பதிப்புக் கழகம்,
காஞ்சீபுரம்.

குறிப்பு :—முன்பண மனுப்பும் நண்பர்களுக்கு விபவ ஞு பொங்கல் புதுநாளன்று கைக்கு வந்து சேருமாறு புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.



## குமரன் வாரப்பதிப்பு

சமாசாரப் பத்திரிகைகளினால் அறிய வேண்டிய எல்லா விஷயங்களும், அரிய கட்டுரைகளும், வியாபார விஷயங்களும், மற்றும் பல விஷயங்களும் வெளி வருகின்றன.

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா உள்நாடு | ரூ. | ௫—௦—௦ |
| ,, வெளிநாடு | ரூ. | ௬—௦—௦ |
| தனிப்பிரதி | ரூ. | ௦—௧—௬ |

## குமரன் மாதப்பதிப்பு

இது தமிழ்ச் சுவை யறிவார்க்குத் தேனென இனிக்கும் ஓர் இனிய மாதப் பத்திரிகை. ஏனையோர்க்கும் விளங்கக் கூடிய பல கட்டுரைகளும் விநோதப் பகுதிகளும் வெளிவருகின்றன.

| | | |
|---|---|---|
| வருடச் சந்தா உள்நாடு | ரூ. | ௧—௮—௦ |
| ,, வெளிநாடு | ரூ. | ௨—௦—௦ |
| தனிப்பிரதி | ரூ. | ௦—௨—௦ |

எப்பொழுது சேர்ந்தாலும் தை மாதம் முதலே கணக்கு வைக்கப்பெறும்.

மானேஜர்,
குமரன் ஆபீஸ், காரைக்குடி.

Ex.

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 DEC 1928

ஓம்

# சித்தாந்தம்

“எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே”

| மலர் க | விபவ ஆண்டு ஐப்பசித் திங்கள்<br>1928 ஆம் நவம்பர் மீ | இதழ் கக |
|---|---|---|

## குயில்

[பத்திராசிரியர் : மணி. திருநாவுக்கரசு முதலியார்]

தேமாவின் கிளைகளிலே தெவிட்டாத இசைமிழற்றிப்
பூமாதே போலொளிரும் புனிதமுறும் கருங்குயிலே!
சீமானய் எவ்விடத்துந் திகழ்கின்ற பெருமானைக்
கோமானே வாவென்று குரலெடுத்துக் கூவாயே!

பூஞ்சோலை விளையாடிப் புதுப்புதிய பாப்பாடி
மாஞ்சோலை மகிழ்ந்திருக்கும் மணிநிறமார் பூங்குயிலே!
வாஞ்சையுடன் நம்மையெல்லாம் வாழ்விக்கும் பெருமானைத்
தீஞ்சுவையார் அமிழ்தளிக்கத் தித்திக்கக் கூவாயே!

அன்னையவன் அப்பனவன் ஐயனவன் நண்பனவன்
பொன்னினுஞ்சீர் மணியினினும் பொலிவுடைய பொற்குயிலே!
இன்னுயிருக் குயிராக இலங்குமொரு பெருமானை
மன்னவனே வாவென்று மனமுவந்து கூவாயே!

உண்பதுவும் அவனாணே உடுப்பதுவும் அவனுடை
எண்ணுவதும் அவனெண்ணம் எழின்மிகுந்த பொழிற்குயிலே!
நண்ணுதுயர் தீர்த்தெவர்க்கும் நலமளிக்கும் பெருமானை
அண்ணல்வா வாவென்றே அருங்குரலாற் கூவாயே!

---

இஃது இவ்வாசிரியர் இயற்றிய செந்தமிழ் வாசகம் நான்காம் புத்தகச் செய்யுள் வரிசையினின்றும் எடுக்கப்பட்டது.

# அத்துவிதம்

[மணவழகு]

நத்விதீயம் என்ற வடமொழியின் முதலில் உள்ள ‘ந’ என்னும் உபசர்க்கத்தில் ‘ந்’ என்னும் மெய்யெழுத்துப் போக, அம்மெய்யின்மேல் ஏறி நின்ற ‘அ’ என்னும் உயிரெழுத்து மாத்திரம் நின்று அத்விதீயம் என்றாகி, செந்தமிழ் வழக்கில் *அத்துவிதம் என்று திரிபெய்திவரும். ‘ந’ என்னும் அகரம் அன்மை, இன்மை, மறுதலை என்னும் பொருள்களைப் பயக்கும். அகரம் உயர்திணை அஃறிணை பொருட் பெயர்களோடு சேர்ந்தவழி அன்மைப் பொருளுணர்த்தும். அஃது ஒரு பொருளை மறுத்து வேறு பொருளை நாட்டுவதாம். அப்பிராமணன் எனின் பிராமணனல்லாதவன் எனப் பொருளுணர்த்தலை யறிக. அசைவன், அநேகர், அஞ்ஞானி முதலிய சொற்களினும் இவ்வுண்மை தேர்க. அகரம் அஃறிணைப் பண்புச் சொல்லுடன் சேர்ந்தவழி இன்மைப்பொருளை யுணர்த்தும். அஃது ஒரு பொருளினிருப்பை மறுத்து அதன் பாவத்தை நாட்டுவதாம். அப்பிரகாசம் எனின் பிரகாசம் இன்மை எனும் பொருளை யுணர்த்துத லறிக. அமலம், அகளங்கம், அயோக்கியம், அசலம் முதலிய சொற்களிலும் இவ்வுண்மை தேர்க. அகரம் குணகுணிப் பெயர்களுள் ஒன்றுடனொன்று மறுதலைப் பட்டு நிற்பனவற்றுள் ஒன்றைச் சுட்டுமிடத்து மறுதலைப் பொருளை யுணர்த்தும். அசத்தியம் எனின் சத்தியத்துடன் மறுதலைப்பட்ட அசத்தியத்தினை யுணர்த்துத லறிக. அஞ்ஞானம் அசாதாரணம், அசேதனம் முதலிய சொற்களினும் இவ்வுண்மை தேர்க. இனி, அன்மை, இன்மை, மறுதலை என்னும் பொருள்களுள் அத்துவிதம் என்னுஞ் சொல்லினின்ற அகரம் எப்பொருளை யுணர்த்து மெனின், அன்மைப் பொருளையே யுணர்த்தும். என்னை? துவிதம் என்பது இரண்டு என்னும் எண்ணுப் பொருட்பெயராகலினென்க. “எண்ணுப் பெயர்மேல் வந்த நகரம் அன்மைப்பொருள் மாத்திரையே யுணர்த்திப் பொதுமையி னிற்ப தன்றி ஏனைய சொற்களின்மேல் வந்த நகரம் போல இன்மை மறுதலைப் பொருள்களை யுணர்த்துதல் வழக்கின்கண் இன்மையின்” என்று ஆசிரியர் சிவஞான முனிவரும் சிவஞானபோத வுரையில் ஆராய்ந்து நிறுவினர். ஆகவே அத்துவிதம் என்னுஞ் சொல் இரண்டன்மை என்னும் பொருளே சிறப்புடைத்தாகி இயற் பொருத்தமும், பொருட் பொருத்தமு முடைத்தாமென்க. அன்மைப் பொருளைப் பயப்பிக்கும் அத்துவிதத்தினையே சித்தாந்த வைதிக சைவர் சுத்தாத்துவித மென்பர். “இவ்வத்துவிதம் ஏனையோர் கூறும் அத்துவிதம் போலக் கேவல மென்றாதல், விசிட்ட மென்றாதல், மறுதலையென்றாதல் யாதானு மொன்றான் விசேடிக்கப்பட்டு நின்று பொருளுணர்த்தாது சுத்தமாய் நின்றே பொருளுணர்த்துதலின் *சுத்தாத்துவிதம் என வழங்கப்படும். ஈண்டுச் சுத்தமென்பது யாதானு மொன்றான் விசேடிக்கப்படாது நிற்றலை. அது “சுத்தசத்தை” எனத் தார்க்கிகர் கூறும் வாய்ப்பாட்டானு மறிக. இதுகாறும் கூறியவாற்றால், அத்துவிதம் என்னும் சொற்குப்பொருள் தானென்னையோ வெனின் காட்டுதும்: ‘அது நீ ஆகின்றாய்’ எனவும், ‘அது நான் ஆகின்றேன்’ எனவும் ‘அது இது ஆகின்றது’ எனவும் மூவிடம் பற்றி நிகழும் ‘தத்துவமசி’ முதலிய மகாவாக்கியங்களைக் கேட்டவழி, அது என்பது ஒரு பொருள் நீ என்பது ஒரு பொருளாகலின், ஒரு பொருள் மற்றொரு பொருளாமா றியாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்ததாகலின், அது இது ஆதற் கேதுவாய் அவ்விரண்டிற்கு முளதாய சம்பந்த விசேட முணர்த்துதலே அத்துவிதம் என்னும் சொற்குப் பொருளென் றுணர்ந்து கொள்க” அத்துவிதத்திற்குச் சிறந்தெடுத்துக் காட்டப்படும் உவமையாவது ஆன்மபோதமும் கண்ணொளியும் தம்முள் அத்துவிதமா நிற்றலாமென்க. ‘காணுங் கண்ணுக்குக் காட்டுமுளம் போற் காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்’ எனவும், ‘காட்டக் கண்டிடும் தன்மை யுடைய கண்ணுக்கேயுமுயிர் காட்டிக் கண்டிடுமா போல வீசனுயிர்க்குக் காட்டிக் கண்டிடுவன்’ எனவும், ‘அறிவொளிபோற் பிறிவருமத்துவிதமாகும்’ எனவும் முறையே வரு மெய்கண்ட சாத்திரன் முதனூல் வழிநூல் சார்புநூல்களாற்காண்க. “அன்றியும், அத்துவிதத்தை மற்றுஞ் சில உவமானங்களால் விளக்கு மிடத்து, அலியென்னும் மொருமொழி ஆணு மன்று பெண்ணுமன் றெனவும், வாயிலென்னு மொருமொழி உள்ளு மன்று வெளியு மன்றெனவும், நடு வென்னு மொருமொழி அடியுமன்று முடியு மன்றெனவும், மாலையென்னு மொருமொழி இரவு மன்று பகலு மன்றெனவும் நிற்றல்போல, அத்துவித மென்னு மொருமொழி ஏகமு மன்று, துவிதமு மன்றெனத் தீர்மானித்து நிற்பதாகும். அது பதியும் பசுவும் பிரிவற்றுள்ள அனாதி கலப்பினையே யுணர்த்தும். பாம்பினது கட்டோளையிற் கண்ணுஞ் செவியும், யானையினது துதிக்கையில் நாசியுங் கையும், மானுட உருவில் உடம்பு முயிரும், பேய் பிடித்தானுருவிற் பேயும் பிடிபட்ட வுயிரும், வௌவா லுருவிற் பறவை வடிவும் விலங்கு வடிவுமுள்ளமையை யொக்கும். தென்முகத் தெய்வம் திருக்கரம் காட்டுவது மிதுவே.” ‘ஒன்றாகாமல் இரண்டாகாமல் ஒன்று மிரண்டு மின்றாகாமல்’ என்னும் அற்புதத் திருமொழியு மிதனை வலியுறுத்தும்.

*இதனை பாணினீயம் 6-வது அத்தியாயம், 3-வது [illegible] போநஜ்ஞு : என்னுஞ் சூத்திர விதியால் அறிக.

* சுத்தாத்துவித பிரயோகம் மண்டலப் ராமஹ்மணோபநிஷத் முதலியவற்றிற் காணப்படுகிறது. கேவலாத்துவிதம், விசிஷ்டாத்துவிதம் எனும் பிரயோகங்கள் உபநிடதங்க ளொன்றிலுங் காணப்படவில்லை.

87126
Chennai-600 005.

## மதிப்புரை

### மநுநீதி சதகம்

ஆசிரியர்: திருவெண்ணெய்நல்லூர் இராசப்ப உபாத்தியாயர் அவர்கள்.
பதிப்பாசிரியர்: திரு. அ. மஹாதேவ செட்டியார் அவர்கள்.
அரிய ஆராய்ச்சி முகவுரையுடன் கூடியது. விலை அணா 8.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ சாதுரத்தின சற்குரு புத்தகசாலை,
4/34, கயணியப்ப நாயக்கன் தெரு, பார்க்டவுன், சென்னை.

# உயிரின் தன்மை

[பசுலட்சணம்]

## J. M. N.

"க்ஷரம், (அழிபொருள்) அக்ஷரம் (அழிவில்லாப் பொருள்), வியக்தம், அவ்யக்தமாயுள்ள எல்லாவற்றிற்கும் ஈசன் ஆதாரமாயுள்ளான். அநீசனாகிய ஜீவாத்மா பந்தப்பட்டிருக்கிறான், கர்மபலன்களைப் புசிக்கவேண்டியிருப்பதால். ஆயினும், தேவனை யுணர்ந்தவுடன் சகல பாசங்களினின்றும் விடுபடுகிறான்.

"ஞன், (அறிவுள்ளவன்—ஈசன்) அஞ்ஞன் (அறிவில்லாதவன்— அநீசன்) என்ற இருபதார்த்தங்கள் உள: இரண்டும் பிறப்பற்றது. ஒன்று பலமுடையது, இன்னொன்று பலமற்றது. பிறப்பற்றதாகிய (அநாதியாகிய) ஒருத்தியும் (மாயாசக்தி) இருக்கிறாள். அவள் மூலமாக சீவனும் தன் கர்மபலத்தை யடைகிறான். மேலும், முடிவில்லாத ஆத்மாவும் (ஈசன்), பலவற்றினும் தோய்ந்தும் தோய்வில்லாமல் உளன்.

"அழிபொருள் பிரதானம். அமிர்தமும் அழிவில்லாததும் அரன். ஒன்றேயாகிய தேவன் பிரதானத்தையும் ஆத்மாவையும் (சீவனையும்) ஆளுகிறான். அரனைத் தியானிப்பதனாலும், கூடுதலினாலும், அவனுடன் ஒன்றாதலினாலும் முடிவில் எல்லா மயக்கமும் அறுகின்றது.

(சுவேதாஸ்வதர உபநிடதம் 1-8-10)

"ஒரே மரத்தில், அநீசன், தன் துர்ப்பவத்தால் மயங்கித் துன்பத்தில் அமிழ்ந்திக் கிடக்கின்றான். மற்றும் சாந்தனாகிய ஈசனைத் தரிசித்து அவன் மகிமையை யுணரின், அவன் துக்கம் விடுபடுகிறது"

(மாண்டூக்கிய உபநிடதம்-3-1-2.)

உயிரெனப்படுவதிந்த உடலின்
வேறுளதா யுற்றுச்
செயிருறு மிச்சா ஞானச் செய்திக ளுடையதாகிப்
பயில்வுறு மின்ப துன்பப் பலன்களு
நுகரும் பார்க்கின்
துயிலொடு மைந்தவத்தைப் படுமுண்மை
துரியாதீதம்"

(சிவஞானசித்தியார். III. 1)

இறுதியிற் காட்டிய பாட்டிற் காணப்படும் ஒவ்வொரு பொருளும் சீவ லட்சணத்தைப் பற்றி மற்ற மதஸ்தர்கள் கூறும் பூர்வபட்சங்களை மறுத்துச் சித்தாந்தம் செய்ததுவாகும். எவ்விதமெனில், அவர்களிற் சிலர், ஆத்மா என்ற தனிப் பொருள் இல்லையென்றும், சிலர் உடலை யன்றி வேறு உயிர் இல்லையென்றும், சிலர் ஐம்புலன்களையும் சூக்கும தேகத்தையும் பிராணனையும், அந்தக் கரணங்களையும், கடவுளையும், முறையே உயிரென்றும், உடல் கூறுகள் எல்லாவற்றையுமே உயிரென்றும் சொல்லுகிறார்கள். உயிர் இவையெல்லா மல்லவாகத் தனித்த ஒரு முதற் பொருள் என விளக்கி யிருக்கிறார்.

"ஐந்துபுலனைம் பூதம் கரணமாதி
அடுத்தகுண மத்தனையுமல்லை யல்லை
யிந்தவுடல் அறிவு அறியாமையு நீயல்லை
யாதொன்று பற்றினதன் இயல்பாய் நின்று
பந்தமறும் பளிங்கனைய சித்து நீயுன்
பக்குவங் கண்டறி விக்கும் பான்மையேம்
[யாம்"

என எம்மை யுடையராகிய தாயுமான சுவாமிகளும் அறுதியிட்டிருக்கிறார்கள். உயிர், சீவன், ஆன்மா, ஆத்மா, பசு, எஜமானன், சதசத்து என்பன பிரதி பதங்கள். முன்கூறியவெல்லாம், சத்தாகிய கடவுளிலும், அசத்தாகிய மாயையிலு மடங்கும். இவையிரண்டு மல்லாததும், இரண்டையு மறியக்கூடிய நிலையி லிருப்பதுமாக ஆன்மாவுக்கும் சதசத்து என்று பேருண்டாயிற்று. பாசத் தளையினாற் கட்டுப்பட்



டிருப்பதால் பசு வெனப் பெயர் பெற்றது. இவ்வான்மா தூலம் அல்லது சூக்கும உடலோடு பந்தத்தில் ஒன்றாகவும், மோக்ஷத்தில் இறைவனோடு ஒன்றாகவும், காணப்படுகின்றது. இந்தச் சம்பந்தத்தையே அத்துவித நிலையெனக் கூறுகின்றார்கள்.

ஆணவத்தோடத்து விதமானபடி
மெய்ஞ்ஞானத்
தாணுவினோடத்து விதஞ்சாரு
நாளெந்நாளோ.

(தாயுமானவர் பாடல்.)

இவ்வுயிருக்கு இச்சை, அறிவு, தொழில்கள் உண்டெனினும், சிவபெருமானின் இச்சா ஞானக்கிரியைகளுக்கு ஒப்பாகா. ஆன்மாக்கள் சிற்றறிவும், சிறு தொழிலும் உடையவையாகி, இறைவனால் அறிவித்தா லன்றி யறியாவுளங்களாய் நிற்கின்றன. உயிர் வேண்டுதல் வேண்டாமை யுளதாகலின், இன்பதுன்பங்கள் அதற்கு உளதெனக் கூறப்பட்டது. சிலர் கூறுவதுபோல் இவ்வின்ப துன்பங்கள் அத்யாசமன்று. இதனாலும், உயிர், 'வேண்டுதல் வேண்டாமையிலான், 'பற்றற்றான்' 'மலமிலான்' 'சஞ்சலமிலான்' எனக் கூறப்படுவதும் இறைவனுடன் வேற்றுமைப் படுவதும் காணலாம்.

உயிரானது அதற்குள்ள கோசங்களினாலும் கட்டுப்படுகின்றது. இக்கட்டுக்களும் அத்யாசமன்று.

இவ்வளவு சொல்லியும், மற்றெங்கும் காணப்படாமல் சித்தாந்தத்தினிடத்தே மட்டும் காணப்படும் உயிரின் முக்கிய இலக்கணம் இன்னொன்று கூறவேண்டும். அதனைக் கூறினாலொழிய, இவ்வாராய்ச்சியின் வழியிற் கிடக்கும் கரடுமுரடுகளை யொழிக்க முடியாது. அது என்னெனின், முதற்கண் காட்டிய தாயுமான சுவாமிகளின் திருவாக்கில் கண்டபடி, உயிரின் அதுவதுவாதற்றன்மையேயாம். இதுவே 'சார்ந்ததன் வண்ணமாதல்' 'யாதொன்று பற்றின் அதன் இயல்பாய் நிற்றல்' என விரித்தோதப்பட்டிருக்கின்றது. அதாவது, உயிரானது எந்தப் பொருளோடு சேர்ந்து இருந்ததோ அந்தச் சமயம், தன் சொரூபம் கெட்டு மற்றையது போலவே நிலைத்தலாம். இதற்கு உதாரணம் கண், ஆகாசம், பளிங்கு அல்லது கண்ணாடி. நமது மாட்சிமை பொருந்திய மகாராஜாவின் படத்தை நாம் எதிரே காண்கின்றோம். அப்பொழுது வர்ணப்படம் நமது பார்வைக்கு அகப்படுமே தவிர கண்ணாடி அகப்படாது. கண்ணாடி யென்ற ஞானமில்லாத ஒருவன் அங்கே கண்ணாடியில்லை யென்றே சாதிப்பான். கண்ணாடி இல்லாமற் போகவில்லை. ஆனால் அது படத்துடன் மறைந்து அதன் வண்ணமாய்த் தன் சொரூபம் கெட்டு நிற்கின்றது. சூரியன் முன் வைத்தபொழுதும் கண்ணாடி காணப்படாமல், சூரியன் ஒளியே பிரதிபலிக்கும். உயிர் உடலோடு பற்றி நின்ற காலத்து, உடலையே தானாகப் பாவித்துநிற்கும். இதுபந்தம். இது போலவே இறைவனுடன் ஒன்றாகப் பாவித்துத் தன் சொரூபம் கெட்டு நிற்கும்; இதுதான் மோக்ஷம். இவ்வுயிரின் துர்ப்பலம் ஒன்றுண்டு. அது அதன் பற்றுக்கோடின்றி நிற்றலாகாமையே. அதாவது உயிரானது உடலையாவது, இறைவனையாவது பற்றிக்கொண்டே நிற்குமே தவிர தனித்து நில்லாது. இதற்கு உதாரணம்: நெருப்பு கட்டையையாவது, விளக்குத் திரியையாவது பற்றி நிற்குமே தவிர, தனியாகக் காணக் கூடாததுபோல. இவ்வுண்மைகளைக் காணாமையினால்தான்,

புத்தர் முதலிய நாத்திகராவார் உயிரில்லை யென்றார்கள். இதனாற்றான் சங்கரர் முதலிய மகான்களும் உயிர் தனித்ததொரு பொருளில்லை யென்றார்கள்.

மேலைநாட்டுத் தத்துவ பரிசோதகர்களில், புரொபஸர் ஹென்ரி டிரம்மண்டு என்னும் பெரியார் ஒருவர் மட்டுமே, மேற்சுட்டிய உயிரின் அதுஅதுவாதற்றன்மையை விளக்கியுள்ளார். அவர் கூறுவது : 'மானிடர்களெல்லாம் கண்ணாடிகள். உயிர்கள் உய்ய வேண்டியோ, அல்லது இழிய வேண்டியோ நடைபெறும்வழிக்கு இது முதல் அஸ்திபாரம். மனிதன் உண்மைக் குணத்தைக் காட்டக் கூடிய உபமானங்களில், கண்ணாடி திருஷ்டாந்தமானது மிகவும் பொருத்த முடையது.'

இந்தப் பளிங்கின் திருட்டாந்தத்தை அனுசரித்துப் பின்வருமாறு வாய்பாடு கூறலாம்: "நான் கடவுளைப் பார்க்கின்றேன். என்னில் கடவுள் பிரதிபலிக்கின்றார். நான் கடவுள்போல் (சாரூபம்) ஆகின்றேன். நான் கடவுள் ஆகின்றேன். நானே கடவுள்."

இந்த உயிரின் தன்மைதான் (பிரதிபலித்தலும் ஒன்றாதலும்) நம்முடைய மந்திர தந்திரங்களுக்கும், உபாசனை, சாதனை, யோகம், பாவனைகளுக்கும் ஆதாரம். இதனையே மாந்திரிகன் சருடமந்திர பாவனை திருட்டாந்தத்தால் விளக்கியதும். மேலைநாட்டுத் தத்துவ சாஸ்திரிகளும், இவ்வுண்மை சீவதத்வ நிகழ்ச்சியில் விளங்குவதை எடுத்துக் காட்டியிருக்கின்றார்கள். குதிரைகளோடும், பன்றிகளோடும் என்றும் பழகுகின்றவர்கள் முறையே குதிரை, பன்றி ரூபம் அடைகின்றார்கள் என்றும், தலைவனும் தலைவியும் மனமொத்து வாழும் பொழுது இருவர் முகங்களும் முதலில் பேதமாயிருக்கினும் முடிவில் அபேத சொரூப மடைகின்றதென்றும், ஒரு குழந்தை செவிலித்தாயின் சொரூபத்தை அடைகின்றதென்றும் காட்டியிருக்கிறார்கள். ஆகையால் இந்த அதுஅதுவாதல் தன்மையால், ஒருவன் தாழ்ந்த மிருகப்பிராயத்தில் இழிவதும், உயர்ந்த தெய்விகப்பதவியிற் சார்வதும் ஆகும்.

இந்த வுண்மைதான் தத்துவமசி முதலிய மகாவாக்கியங்களிலும் அமைந்தது. இதுவே நான், கடவுள் என்ற இரண்டு பொருள்கள் ஒன்றாவதைக் குறிப்பது. இத்தன்மையாலன்றி, இரண்டும் என்றும் ஒன்றாகா. ஆகையால்தான் சோகம் சிவோகம் பாவனையிற் சிறக்க வேண்டுமென்றது.

இந்த வுயிர், கடவுளும், அதன் ஆபாசமும் பரிணமமும் ஆகாது. அது சுயம் பிரகாச மின்றி, திருப் பிடிப்பதால், அதற்கு இச்சைஞானம் தொழில் உண்டாயினும் அவை நிகழ்த்தற் பொருட்டு, இறைவனுடைய இச்சை முதலியன நிகழ வேண்டும். இறைவனும் உயிரும் வெவ்வேறு நிலையில் (சக்கரத்தில்) உள்ளவர்கள். உயிர் உருவம், அருவம், உருவருவம், ஒன்றுமில்லாதது. சித்தும் அசித்தும் அல்லவாகி, சிதசித் அல்லது சதசத்து எனப்படும். அது அணுவும் விபுவும் அல்ல. அது அருவும், விபுவும் ஆகும். ஆயின், அசித்தைப் போலன்று. அதன் வியாபகத்தன்மையும் சார்ந்ததனோடு ஒன்றாகும் வியாபகமே. அதன் நித்திய அறிவு, மாயையினாலல்ல; மற்று ஆணவ மலத்தினால் தடைபட்டிருக்கின்றது; மறைக்கப்பட்டிருக்கின்றது. உயிர் சாக்கிரம் சொப்பனம் முதலிய ஐந்த



வத்தைகளிற் படும். அன்னமயம் முதலிய ஐந்து கோசங்களிற் றங்கி அவையாகாமலும் நிற்கும்.

இதுவன்றி, உயிருக்குக் கேவலம், சகலம், சுத்தம் என்று மூன்று அவஸ்தைகளும் உண்டு. பஞ்சகிருத்தியம் ஆரம்பமாகுமுன், அறிவிச்சை தொழில் ஒன்றின்றி ஆணவத்தில் அழுந்தி நிற்றல் கேவலம். அக்கிருத்தியம் தொடங்கியபின் தனுகரணங்களைப் பெற்று, புண்ணிய பாவங்களைச்செய்து இன்பதுன்பங்களை அனுபவிக்கும் நிலை சகலம். சுத்த அவத்தையில், உயிர் இருவினை யொப்பெய்தி, மலபரிபாகம் பெற்றுச் சற்குரு தரிசன மெய்திச் சத்திநிபாதமடைந்து, பிறகு நம் சிவத்தின் அளவிலா ஆநந்தத்தில் அழுந்தி என்றும் மீளா இன்ப முறுகின்றது.

---

# சிவமும் சத்தியும்

[D. கோபால செட்டியார், முன் "நியு ரிபார்மர்" பத்திராதிபர்]

தன்னை விளக்குவதும் விஷயங்களை விளக்குவதும் தானே யான சூரியன், விடயங்களை விளக்குங்காற் கதிர் எனவும், தன்னை விளக்குங்காற் கதிரோனெனவும் இருதிறப்பட்டு இயைந்து நிற்பது போல, அநாதி முத்த சித்துருவாகிய முதல்வர் புறப்பொருளை நோக்காது ஒன்றிலும் தோய்வில்லாமல் தாமே சுயம் பிரகாசமாய் அறிவு மாத்திரையாய் தம் உண்மையிற் சிவம் எனவும், புறப்பொருளை நோக்கி, "உலகெலாமாகி வேறாய் உடனுமாய்" ஆன்மாக்களிடத்து நிற்கும் தன்மையிற் சத்தி எனவும், தாதான்மியத்தால் இருதிறப்படும்.

திருமூலர் திருமந்திரம் இச்சிவத்தைக் குறித்து,

"அன்புஞ்சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தியாரு மறிந்தபின்
அன்பே சிவமா யமர்ந்திருந் தாரே."

எனக் கூறும்.

சிவஞான சித்தியார் சத்தியைக் குறித்து,

"சத்தின்தன் வடிவே தென்னிற்
றடையிலா ஞான மாகும்
உய்த்திடு மிச்சை செய்தியிவை
ஞானத்துளவோ வென்னில்
எத்திற ஞானமுள்ள தத்திற
மிச்சை செய்தி
வைத்திடுமறைப் பின்ஞானன் மருவிடுங்
கிரியை யெல்லாம்."

எனக் கூறும்.

சாதாரணமாய் உலகத்தார் அன்பையும் ஞானத்தையும் நுண்மையான ஆகாயத்தில் ஆவியாய்ப் போகப்பட்ட ஓர் பிரவகிக்கும் பொருளாகவும் அல்லது அவ்விதமான ஒன்றிலிருந்து வரும் ஆவியாகவும் நினைக்கிறார்கள். அவைகள் உண்மையாகவே சூக்கும பொருள்களென்றும் அவைகளுக்கு சூக்கும வடிவமுண்டென்றும் யாருக்கும் புலப்படாது. அன்பும் ஞானமும் குணமன்றி அவைகளே பொருள்களாம். ஞான வெளிச்சத்தில் நின்றோர்க்கு இது நன்கு விளங்கும். இந்த உண்மையை சுவிடென்பர்க் எனும் மேனாட்டு ஞானியார் தமது நூல்களில் நன்கு விளக்கியுள்ளார்.

இச் சிவத்தையும் சத்தியையுங் குறித்துச் சிவஞான சித்தியார் கூறுவதாவது :—

“ சிவஞ்சத்தி தன்னை யீன்றுஞ்
 சத்திதான் சிவத்தை யீன்று
 மூவர் திருவரும் புணர்ந்திங்
 குலகுயி ரெல்லா மீன்றும்
 பவன் பிரமசாரி யாகும்
 பான்மொழி கன்னியாகுந்
 தவந்தரு ஞானத் தோர்க்கித்
 தன்மை தான்றெரியு மன்றே”

இச்சூத்திரத்தில் மூன்று மேற்கோள்கள் கூறப்பட்டுள்ளன. அவை யாவன :—

(1) சிவபெருமான் சத்தி தன்னை ஈன்றதும், சத்திதான் சிவத்தை ஈன்றதும்,

(2) மகிழ்ந்து இருவரும் புணர்ந்து உலகுயிர் எல்லா மீன்றதும்,

(3) அங்ஙனமிருந்தும் சிவபெருமான் பிரமசாரி யென்பதும், சத்தி கன்னி என்பதுமாம்.

நமது குரு அருணந்தி சிவாசாரியாரே இந்த விடயங்கள் “ தவந்தரு ஞானத்தோருக்குக்” தெரியு மென்றால் புல்லறிவுள்ள யான் அவைகளை விவரித்தல் முடியாத காரியமாயினும், இறைவன் அருளை முன்னிட்டு விவரிக்கத் துணிவு கொள்ளுகின்றனன். இதில் குற்றங் குறைகளிருப்பினும் ஞானிகள் மன்னித்தருள வேண்டும்.

முதலாவது சிவபெருமான் சத்தி தன்னை ஈன்றதும் சத்திதான் சிவத்தை ஈன்றதும்.

இதை விசாரிக்கப்புகின், சத்தியானது முதல்வனைவிட வேறோரு முதல்வன்றானோ என ஓர் ஐயப்பாடு தோன்றுகிறது. மீமாம்சகர் வேறு என்று கூறுவர். நையாயிகர் வேறன்றெனக் கூறுவர். சிவஞான போதம் இரண்டாம் சூத்திரம் நான்காம் அதிகரணம் முதல்வனுக்குச்சத்தி வேறுமன்று முதல்வனுமன்றென்று கூறி முதல்வனும் சத்தியும் பொருளால் ஒன்றாயும் தன்மையால் இரண்டாயும் நிற்குமெனக் கூறும்.

சைவ சித்தாந்தத்தில் சமவாயம் என்பது தாதான்மிய சம்பந்தத்தைக் குறிக்கும். தாதான்மிய சம்பந்தம் குணத்திற்கும் குணிக்கும் உண்டான ஒற்றுமைச் சம்பந்தம் எனவும், இரண்டு பொருள்களுக்குள்ள ஒற்றுமைச் சம்பந்தம் எனவும் இருவகைப்படும். இவைகளுள் குண குணிக்குள்ள ஒற்றுமை தாதான்மிய மென்றும், இரு பொருளுக்குமுள்ள ஒற்றுமை அத்துவித மென்றும் கூறப்படும். இவரிடத்திற்குரிய தாதான்மியம் குண குணிகளுக்குள்ள தாதான்மியம். சிவம் - குணி. சத்தி - குணம்.

நெருப்பின் சத்தி அதனின் வேற்றுமை யின்றி உடனாய் நிற்றலின், நெருப்புப்போல் காட்சி யளவையால் நினைக்கப்படா தாயினும், இவ்விடத்தில் அருத்தாபத்தி பிரமாணத்தால் வேறாய்த் துணியப்படுதலின், அத்தன்மை யுள்ள சத்தியுளதென்று தெளிவாய் ஏற்படுகிறது. சிவஞான முனிவர் தமது திராவிட பாடியத்தில் சத்தியுண்மை அருத்தா பத்திப் பிரமாணத்தால்துணியுமாறு உதாரணம் அடியில் கண்டவாறு காண் பித்துள்ளார் :— “நெருப்புதன்னைத் தீண்டில் விரலைச்சுடுதல்காண்டும் ; அதன் பின் ஒருவன் உச்சரிக்கும் மந்திர சத்தியால் சுடாமை காண்டும் ; அவ்விரண்டு காலத்தும் நெருப்பு ஒரு தன்மையாதலிற் பிறழாமையும் காண்டுமாகலின், மந்திர சத்தியால் மறைந்தும், அஃதில் வழி விளங்கியுஞ் சுடுதற்றொழிற்குக் காரணமாயதோர் சத்தி அந்நெருப்பின் வேறாயுண்டென்பது துணியப்படு மென்க ”

(தொடரும்)

# குருவுக்கும் மாணவனுக்கும் சம்பாஷணை

[R. M. அண்ணாமலை செட்டியார்]

மாணவன் :— குருநாதா! தங்களிடம் சில உண்மைகள் தெரிய விரும்புகின்றேன். அவற்றை இப்போது கேட்கலாமா ?

குரு:—மாணவ! நீ தெரிந்துகொள்ள வேண்டியது எதுவானாலும் தைரியமாகக் கேள். இப்போது பதில் சொல்லத் தயாராக இருக்கின்றேன்.

மா :—குல தெய்வ மென்று சொல்லப்படுவது யாரை ?

குரு :—அங்கிங்கெனாதபடி எங்கும் வியாபகமாகவும், இறப்புப் பிறப்புக்களிற் கட்டுப்படாததாகவு முள்ள முழுமுதற் கடவுளாகிய பொன்னம்பலவாணரே நம் குலதெய்வமென் றறிவாயாக.

மா :—இதற்குப் பிரமாணம் யாது ?

குரு :—

“ அடியார்க் கெளியவ ரம்பல
 வாணரடி பணிந்தால்
 மடியாமற் செல்வ வரம்பெறலாம்
 வையமே ழளந்த
 நெடியோனும் வேதனுங் காணாத
 நித்த நிமலனருட்
 குடிகாணு நாங்களவர்
 காணுமெங்கள் குலதெய்வமே ”

என்று முற்றத் துறந்த முனிவராகிய பட்டினத்துப் பிள்ளையா ரருளியதே பிரமாண மென்க.

மா:—தாங்கள் பிரமாணமாகக் கூறியவரோ முற்றத்துறந்த முனிவர்! அவர் கூறியது எனக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லையே.

குரு :—அறியாது கூறினாய். முற்றத் துறந்த முனிவாருளியவை யெல்லாம் நம்மனோர் முன்னேற்ற மடையும் பொருட்டுப் பாடப்பட்டவைகளாதலின் அவற்றை மறுத்தல் குற்றமாகும். அன்றியும் “ உலகத்தா ருண்டென்பதில்லென்பான் வையத்தலகையா வைக்கப்படும் ” இதன் பொருள்: உயர்ந்தோர் பலரும் உண்டென்று கூறிய பொருளை இல்லை யென்று தன் புல்லறிவால் கூறுபவன் மகனெனக் கருதப்படான் ; இவ்வுலகத்துக் காணப்படுவதோர் பேயென்று கருதப்படுவான் என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவனாருளிச் செய்துள்ளா ராதலின் முனிவ ரருளியதை அப்படியே ஒப்புக் கொள்வாயாக.

மா :— தங்கள் சொற்படி பெரியாரருளியதை அப்படியே ஒப்புக்கொள்கின்றேன். ஆனால் அதில் ஒரு சந்தேக மிருக்கின்றது. அதாவது எங்கள் முன்னோர்கள் மாடன், வீரன், இசக்கி, முதலானவைகளையே குல தெய்வமென்று வணங்கி வந்திருக்கின்றார்களே. அதற்குக் காரணம் தயவு செய்து தெரிவித்தல் வேண்டும்.

குரு—: நீ கூறியபடி முன்னோர்கள் மேற்கூறிய சிறு தெய்வங்களையே வணங்கி வந்தன ரென்பதற்குப் பிரமாண மில்லை. அன்றியும் உலகப்பற்றை விட்டு எல்லாம் வல்ல இறைவன் திருவருட் பிரசாதம் பெற்ற மெய்ஞ்ஞானிகளையே முன்னோர்க ளென்று கொள்ள வேண்டுமே யன்றி உலகப்பற்றுடையராயும் வயதினால் மாத்திரம் மேம்பட்டவராயுமுள்ள மாந்தரை முன்னோர்களென்று கொள்ள லாகாது. ஏனென்றால் அவர்கள் முக்குண வயத்தால்

முறை பிறழ்ந்தறைவ ராதலால் அவரைப் பெரியா ரென்று கொண்டு மயங்காதே. நாம் அவர்களைப் பின்பற்றி நடக்கவும் கடமைப் பட்டவர்களல்ல.

மா:—ஐயனே! அப்படி யானால் மாடன், வீரன், இசக்கி, முதலான தெய்வங்கள் வந்த காரண மென்ன?

குரு:—மேற்கூறிய சிறு தெய்வங்களெல்லாம் முற்பிறப்புக்களிற் செய்த தீ வினைப் பயனாக முழு முதற் கடவுளாகிய பொன்னம்பல வாணரின் ஆணையின்படி பேய் வடிவங் கொண்டு இருளுலகத்தில் சுற்றித் திரிந்துகொண் டிருப்பனவாகும். ஆதலால் நீ அவற்றை வணங்கினாலும் முழு முதற் கடவுளரே பயன் கொடுப்பாரே யன்றி அவைகட்குச் சுதந்தரச் செயலொன்று மில்லையாதலாலே அவை நமக்குப் பலன் தராதென் றறிவாயாக.

மா:—இதற்கென்ன சான்று?

குரு:—

"யாதொரு தெய்வங் கொண்டீ
ரத்தெய்வ மாகி யாங்கே
மாதொரு பாகனார் தாம்
வருவர் மற்றத் தெய்வங்கள்
வேதனைப் படு மிறக்கும்
பிறக்குமேல் வினையுஞ் செய்யு
மாதலா னிவை யிலாதானறிந்
தருள் செய்வ னன்றே"

என்று நமது சந்தானாசாரியராகிய அருணந்தி சிவம் அருளியதே தக்க சான்றாகும்.

மா:—இனித் தாங்கள் கூறியவாறு அச்சிறு தெய்வங்கட்குச் சுதந்தாச் செயலில்லை யானாலும் அவைகளை வணங்கி அவைகட்கு உயிர்ப்பலி கொடுக்கவில்லையானால் எங்கள் குடும்பங்கட்குத் துன்பத்தை விளைவிக்கின்றனவே இதற்கென்செய்வது?

குரு:—அச்சிறு தெய்வங்கட்குச் சுதந்தரச் செயலில்லை யாதலால் அவைகளால் உனக்காகிலும் உன் குடும்பத்திற்காகிலும் துன்பம் செய்ய முடியாது. ஆனால் துன்பம் வருதற்குக் காரணம் என்னையோ வெனின், "நோயெல்லா நோய் செய்தார் மேலவா நோய் செய்யார் நோயின்மை வேண்படுவர்," என்ற பெரியார் திருவாக்குப்படி ஒருவன் முற்பிறப்புக்களிற் செய்து கொண்ட தீவினையின் பயனாக அச்சிறு தெய்வங்கள் மூலமாகவும் துன்பம் வரக் கூடும். அத்துன்பம் நீங்க வேண்டுமானால் எல்லாம் வல்ல இறைவனாரிடம் முறையிட்டால் துன்ப நீங்கி இன்ப மடையலாம். அதற்குப் பதிலாக அச்சிறு தெய்வங்களிடம் முறையிடுதல் எது போல இருக்கிற தென்றால் திருடர்களாற் றுன்பம் வருமானால் அரசனிடம் முறையிட்டால் அவர்களாற் றுன்பம் வராமல் அரசனே காப்பான். அதற்குப் பதிலாக அரசனாணையின்படி இருட்டறையில் அடைபட்டிருக்கும் கைதிகளிடம் சென்று ஏ! கைதிகளே, உங்கட்கு வேண்டிய பொருள்களில் எங்களா லியன்றதைத் தருகின்றோம்; அவற்றை யேற்றுக்கொண்டு இனி எங்கட்கு எவ்விதத் துன்பமும் விளைத்தலாகாது." என்று முறையிட்டுக் கொள்வதையே ஒத்திருக்கின்றது நீங்கள் இறைவன் பாற் சென்று முறையிடாமல் சிறு தெய்வங்களிடஞ் சென்று நீகேட்கிற உயிர்ப்பலியைத் தந்து விடுகின்றோம்; இனிமே லெவ்விதத் துன்பமும் விளைக்கலாகாது என்று முறையிடுதலானது. இதனால் அவற்றை வணங்க வேண்டியது மில்லை; அவைகட்கு உயிர்ப் பலி கொடுக்க வேண்டியது மில்லை என்பதைத் தெரிவித்துக் கொண்டேன்,



மா:—தாங்கள் கூறியதை மனமுவந்து ஒப்புக் கொண்டேன். ஆனால் உயிர்ப் பலி விஷயமாக மாத்திரம் சந்தேகமிருப்பதால் அதை மிகவும் விரிவாக விளக்கி யருளக் கேட்டுக் கொள்கின்றேன்.

குரு:—முதலாவதாக அச்சிறு தெய்வங்கள் உன்னிடம் வந்து உயிர்ப் பலி கேட்க வில்லை. ஒருவாறு கேட்பதாக வைத்துக் கொள்வோம். உனது துன்பத்தை நீக்குதற்கு உன்னிலும் தாழ்ந்த உயிர்ப் பிராணிகளைப் பலி கேட்கும் தெய்வமானது உன்னிலும் மேலாயினார் அவைகளிடம் தங்கள் குறையை முறையிடுங்கால் உன்னையே கொண்டுவரும்படி சொல்லு மல்லவா? அப்படிக் கேட்கும் தெய்வம் ஒரு தெய்வ மாகுமா? அதனைப் பேயென்று தானே கொள்ள வேண்டும். இன்னும் உன்னறியாமைக்கோர் விளக்கம் காட்டுதும் கேட்பாயாக. அவரை விதைத்தால் அவரை முளைக்கும். துவரை விதைத்தால் துவரை முளைக்கும். அவரை துவரை யாகாது. துவரை யவரை யாகாது. இதுவே உண்மை விதி. இதுபோல நீ ஓர் உயிருக்கு இன்பஞ் செய்தால் நீயும் இன்ப மடைவாய். துன்பம் செய்தால் துன்ப மடைவாய். உயிர்ப் பலி கொடுத்தலோ ஓருயிர்க்குப் பெரியதோர் துன்பத்தை விளைப்பதாகும். எனவே அவ்வுயிர்க்குச் செய்த தீவினையின் பயனாக நீயும் துன்பம் அடைய வேண்டி வருமேயல்லாது இன்பமடைதல் கூடாது. இவ்வாறன்றி உயிர்ப் பலி கொடுத்தலால் நீ இன்பமடைவாயென்று சொல்வதானது விரோத விதியேயன்றி உண்மை விதியல்ல வென்றறிய வேண்டும். மேலும் கொஞ்சம் விரிவாகக் கூறுவாம் கேட்பாயாக. எல்லாம் வல்ல இறைவன் ஆன்மாக்களின் அறிவு விளக்கத்தின் பொருட்டு ஓரறிவுமுதல் ஆறறிவுவரை உடல் வகுத்துக் கொடுத்திருக்கின்றார். அது எதுபோல வென்றால் தகப்பன் பிள்ளைகட்குச் சட்டை தைத்துக் கொடுக்கு மாதிரி இறைவன், உடலாகிய சட்டையைத் தைத்துக் கொடுத்திருக்கின்றார். பிள்ளையின் சட்டை அழுக்காய்ப் போய் விட்டாலும் கிழிந்து போய் விட்டாலும் அது இனிப் பயன்படாதென்று கண்ட தகப்பன் அப்பழைய சட்டையை வாங்கிக்கொண்டு புதியதோர் சட்டையைத் தைத்துக் கொடுப்பான். அதுபோல எல்லாம்வல்ல இறைவனாரும் தம்பிள்ளைகளாகிய உயிர்கட்குக் கொடுத்த உடலாகிய சட்டை பழுதுபட்டுப் போகுமானால் அது அவ் வுயிர்க்குப் பயன்படாதென்று கண்ட தந்தை அப்பழைய வுடலை வாங்கிக்கொண்டு புதியதோர் உடலைக் கொடுப்பார். இக்கருத்துக்கு மாறாகத் தந்தை தந்த சட்டை தனக்குப் பொருத்த மில்லையென்று தானாகக் கழற்றி எறிந்து விட்டால் தந்தையின் கோபத்திற் காளாகி நாள் எல்லாம் சட்டை கிடையாமல் வருந்தவேண்டியது தானே! அதுபோல ஆண்டவன் தந்தவுடல் தனக்குப் பொருத்தமில்லையென்று தற்கொலை செய்து கொண்டானொருவனும் ஆண்டவன் கோபத்திற் காளாகி நாளெல்லாம் உடல் கிடையாமல் இருளுலகத்திற் பேயாய்ச் சுற்றித் திரிய வேண்டியதுதான். இப்பிறவியிலோ ஆண்டவன் உனக்கு மேலான மனித உடலைத் தந்துள்ளார். மேற்கூறியவாற்றால் உன் உடலைக் கூட அழித்தற்கு உனக்கு அதிகாரமில்லாதிருக்குமானால், எக் காரணத்தைக் கொண்டாவது பிறவுயிர்களின் உடலை

யழித்தற்கு உனக்கேது அதிகாரம்! பெரிய மீனுக்குச் சிறிய மீனிரையென்ற மாதிரி வாய்பேச மாட்டாத சாந்த குணமுள்ள சிற்றுயிரைக் கொலை செய்தற்கு எவ்வாறு மனந் துணிகின்றனே! அறிகிலேம். குடிகட்குச் செய்த தீமை அரசனாற் பொறுக்கப் படினும் பொறுக்கப்படும். அரசனுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்பட மாட்டாது. அதுபோல ஆன்மாக்கட்குச் செய்த தீமை கடவுளாலே பொறுக்கப்படினும் பொறுக்கப்படும். கடவுளுக்குச் செய்த தீமையோ பொறுக்கப்பட மாட்டாது. ஆதலால் கடவுள் உயிர்கட்கு உடல் கொடுத்தலாகிய தொழிலைச் செய்து கொண்டிருக்க, அவர் கருத்துக்கு மாறாக அவ்வுடலைச் சிதைக்க நினைத்தாலும் செய்தாலும் எல்லாம் வல்ல இறைவன் மீளா நரகத்திற் செலுத்திவிடுவானென்றறிய வேண்டும். இக்கருத்தையே "கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை, வல்லிடுகாரர் வரி கயிற்றாற் கட்டிச், செல்லிடு நீரென்று தீவாய் நரகிடை நில்லிடு நீரென்று நிறுத்துவர் தாமே" என்றருளிய திருமூல நாயனார் திருவாக்கும் வலியுறுத்துவதாகும். இதனால் உயிர்ப்பலி கூடாதென்று வலியுறுத்தப்பட்டது.

மா:— தெரியாதன வெல்லாம் தெரிவித்த என் குருமணியே! தாங்கள் இதுகாறும் அருளிச் செய்தவற்றை அப்படியே ஒப்புக் கொண்டேன். இவ்வரிய உபதேசத்தால் அங்கிங்கெனாதபடி எங்கும் சர்வ வியாபகமாகவும் இறப்புப் பிறப்புக்களிற் கட்டுபடாததுமான முழுமுதற் கடவுளாகிய பொன்னம்பல வாணரே எனக்குக் குல தெய்வமென்றும், ஏகதேச வியாபகமும் இறப்புப் பிறப்புக்களிற் கட்டுப்பட்டதுமான ஏனைச் சிறு தெய்வங்கள் எனக்குக் குல தெய்வமல்ல வென்றும், எக்காரணங் கொண்டும் எத்தெய்வங்கட்கும் எவ்வுயிர்களையும் பலி செய்தல் கூடாதென்றும், இதை மீறி உயிர்ப்பலி செய்தவர்கள் மீளா நரகத்திற்காளாவரென்றும் சுருதி, யுக்தி, அநுபவவாயிலாக விளக்கியதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல மிகவும் விளக்கமாகத் தெரிந்து கொண்டேன். இந்நன்னெறியை யான் கடைப் பிடித்தொழுகலோடு என் குடும்பத்தாரையும் இவ்வொழுக்க நெறியில் நிறுத்துதற்கு எல்லாம் வல்ல இறைவன் திருவருள் புரிய வேண்டும். தங்கள் பொன்னான திருவடிகட்கு அடியனேன் வணக்கம் பெரிதும் உரியதாக.

---

## அறிக்கை

அன்பர்களில் அநேகர் இன்னும் தங்கள் சந்தாத் தொகையைச் செலுத்தாது இருக்கின்றனர். அன்னோர் இதனைக் கண்ணுற்றவுடனே தயவுசெய்து தாமதமின்றி அனுப்புவார்களாக.

# ஐந்து எழுத்து உண்மை

[பண்டிதர் - திரு. கி. குப்புச்சாமி முதலியார்]

அதாவது, ஐந்து எழுத்தினது உண்மை எனப் பொருள் படும். இவ்வைந்தெழுத்தாவது,

"வேதம் பசு அதன்பால்
மெய்யாகமம் நால்வர்
ஓதுந் தமிழ் அதனின்
உள்ளூறு நெய் - போதமிகு
நெய்யின் உறு சுவையாம்
நீள் வெண்ணெய் மெய்கண்டான்
செய்த தமிழ்
நூலின் திறம்"

என்று ஆன்றோர் அருள் செய்தவண்ணம் மெய் கண்ட நாதன் திருவருள் செய்த சிவஞான போதத்துள் பதிபசு பாசமாகிய முப்பொருளின் றன்மையும் பிரமாண வாயிலாகவும், இலக்கண வாயிலாகவும் பொதுவாக உணர்த்தியும், பின்னர்ச் சிறப்பியலாகச் சாதனமும் பயனும் உணர்த்துவான் வேண்டிச் சாதனத்தைக் கூறுங் கால், அச்சாதனத்தின் இறுதிச் சூத்திரமாகிய,

"ஊனக் கண் பாச
முணராப் பதியை
ஞானக் கண்ணினிற்
சிந்தை நாடி
உராத் துனைத்தேர்
த்தெனப் பாச மொருவத்
தண்ணிழலாம் பதி விதி
யெண்ணு மஞ்செழுத்தே"

என்னும் சூத்திரத்தின் கடைசியில் கூறியதால் இன்னதென அறிந்தோம். ஆசிரியர் மெய் கண்டார் முதல் மூன்று சூத்திரங்களால் முப்பொருளுண்மைக்குப் பிரமாணமும், இரண்டாவது மூன்று சூத்திரங்களால் அப்பொருள்களுக்கு இலக்கணமும் கூறி முடித்தவுடன், இனி அவ்விதப் பொருளுண்மை உணர்ந்தார்க்கு முதற் பொருளை யுணர வேண்டிய தகுதி இவ்வுயிர்க்கே யுள்ளது, பாசத்திற்கு இல்லை, பாசமோ அறிவற்றதாதலால் அறிவுடைய முழுமுதலைக் காணுதல் ஆகாது. அறிவுடைய முழுமுதலும் அப்பாசத்தினைப் பார்த்ததில்லை. ஆனால் அவ்வறிவுடைய முழு முதல்வனையும், அறிவில்லாத பாசத்தையும் அவ்வவற்றுடன் சேர்ந்து அனுபவிப்பது இரண்டுமல்லாத உயிர்க்கே யுள்ள குணமென்றும், இவ்வுயிரானது அசத்தோடு கூடி நின்ற காலத்து அதன் வழிப் பட்டதாய் அசத்தென்னும் பெயரோடும், சத்தோடு கூடிய காலத்து அதன் வழிப் பட்டதாய் சத்தென்னும் பெயரோடும் இருப்பதால் பொதுவாகச் சத சத்து என்னும் பெயரை யுடையதாக உள்ளதென்றும் அறிவிப்பான் பொருட்டு,

"யாவையுஞ் சூனியஞ் சத்தெதி ராதலின்
சத்தே யறியாது அசத்திலது அறியாது
இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா"

என்று ஏழாஞ் சூத்திரத்தைச் சாதனத்தின் முதற் பகுதியாகக் கூறுவார் அச்சூத்திரத்தின் இறுதியில், "இருதிறன் அறிவுளது இரண்டலா ஆன்மா" என விதந்து கூறினர்.

அது எற்றுக்கோவெனின், படிகம் போன்று மாசற்றதாய் உள்ள ஆன்மா தான் சேரும் பொருளோடு நின்று தன்னியற்கை யொழிந்து சேர்ந்த பொருளின் தன்மையாய் நிற்றலால் அசத்தோடு சேர்ந்த காலத்து அசத்தாகியும் சத்தோடு சேர்ந்த காலத்துச் சத்தாகியும் நிற்கின்றது. இவ்விதம் இவ்விரண்டின் தன்மையையும் அடையக்

கூடிய உயிர் ஒன்றே பாச அறிவோடு கூடியிருந்த காலத்துப் பசுவென இருக்கினும், அவ்வறிவு நீங்கிப் பதியை யடையும் பக்குவம் வந்த காலத்து அதனை அவாவுகின்றது. அவ்விதம் அவாவி நின்ற உயிரின் தன்மையை உணர்ந்த உள் நின்ற இறைவனானவன், அதுகாறும் உள்ளிருந்தானாயினும் மான் பிடிப்பவன் ஒருவன் மான் ஒன்றைக் காட்டி மானைப் பிடிப்பதுபோல் மானுடச் சட்டை தாங்கி இப்பக்குவப்பட்ட உயிரின்முன் குருவாக எழுந்தருளுகின்றான். எழுந்தருளிய இறைவன் உயிரினை நோக்கித் தன் போன்ற சத்தாக உயிர் உள்ளது ஆதலால் அவ்வுயிரினை "நீ வேடுவனல்லை; மன்னவன் குமாரன். ஐம்புலமாகிய வேடுவர் வலையில் அகப்பட்டாய். வேடுவரிடத்து அகப்பட்ட மக்கள் தம் செல்வத்தையெல்லாம் அவர்க்கே கொடுத்து இழப்பதுடன் அவ்வேடுவர் ஏவும் இழி தொழிலையும் செய்வது போல் நீயும் அறிவுச் செல்வமாய் இருக்கின்ற பெரியதோர் செல்வத்தை அவ்வேடுவர்க்கு இழந்து அவ்வைம்புலவேடர்கள் ஏவிய இழிதொழிலையும் செய்கின்றாய்" என்று உணர்த்தலும் அது கேட்ட உயிரானது இதுகாறும் கூடியிருந்த பாச அறிவினை ஒழித்து ஊசல் கயிறற்றால் ஆதாரமாகிய தரையில் விழுவது போல் பாசக் கயிறற்றவுடன் அவன் திருவடியிலேயே அறிவைச் செலுத்த முயற்சிக்கும். இனி, இவ்விதம் முயற்சிக்கின்ற ஆன்மா எவ்வித உபாயங் கொண்டு முயற்சிக்குமெனின், சரியை, கிரியை, யோகங்களாலாகும். ஏனெனின், இதுகாறும் பாச அறிவோடு கூடியிருந்த உயிர் இப்போது பதியை யறிய வேண்டுமாயின் படிப்படியாகச் சென்று அறிய வேண்டுமாதலான் தூலம், சூக்குமம், அதிசூக்குமம் என்கின்ற மூன்று திருவுருவங்களிடத்து வழிபட்டு அறியும் வண்ணம் சரியையாகிய முதற்படியால், தூலமாகிய சகளத் திருவுருவத்தையும், கிரியை யென்கின்ற இரண்டாவது படியால் சகள நிஷ்களமாகிய சூக்குமத்தையும், யோகமாகிய மூன்றாவது படியால் அதிசூக்கும மாகிய நிஷ்களத் திருமேனியையும் அறிகின்றது. இவ்விதம் அறிந்த உயிர் ஒன்றானது தான் சாதித்த சாதனத்தால் உள்நின்ற இறைவன் ஞானத்தையுணர்த்த உணரும். இவ்விதம் பாச ஞானத்தாலும் பசு ஞானத்தாலும், அறியக்கூடாத இறைவனைப் பதிஞானத்தால் அறிந்தவுடன் இதுகாறும்தன்வசப்படுத்தி நின்றபாச ஞானமானது ஒழிந்துபடும். ஒழியவே, உயிர் இதுகாறும் பாச ஞானமென்கின்ற வெயிலால் வருந்திய வருத்தம் நீங்குவதற்குப் பதிஞானமானது தண்ணிய நிழலாய் நிற்கும். இவ்விதம் நின்றதாயினும் பிறவிகள்தோறும் பயின்ற பாச ஞானமானது இவ்வுயிரினை அலைக்கும் என்று அறிகின்றோம். அது எவ்விதமோவெனின், பிறந்தது முதல் வேம்பையே தின்று வளர்ந்த புழு ஒன்று நல்வினைப் பயனால் கரும்பொன்று கிடைத்து அதன் சுவையை உண்ணுமாயினும் முன்னைப் பயிற்சி வயத்தால் அவ்வேம்பினிடத்துச் செல்வது போலாகும். ஆதலால் ஆசிரியர் மெய்கண்டார் சாதனத்தின் இறுதிச் சூத்திரமாகிய ஒன்பதாஞ் சூத்திரத்தின் இறுதியில், 'விதியெண்ணும் ஐந்தெழுத்தே' என்னும் ஞானத்தையடையும் சாதனத்தை முடிவாகக் கூறினர்.



இனி, இவ்விதம் பொருளறிந்த ஒருவன் அதனையடைய விரும்பிய காலத்து அடைதற்குரிய சிறந்த சாதனத்தைச் செய்து அடைவதுபோல் பரம்பொருளினை யடைந்த உயிரானது சாதகத்தைச் சாதித்து அதனையடைதற்குரிய தகுதி தனக்குண்டென்று அறிந்த காலத்து அதனை முட்டில்லாது சாதித்தற்கெழுந்த உபாயம் ஐந்தெழுத்து என்று அறிந்தோம். இவ்வைந்தெழுத்தும் விதிப்படி எண்ணுதல் வேண்டும் என்று கூறினமையால், தூல, சூக்கும, அதி சூக்கும முறையாக எண்ணுதல் வேண்டும் என்று அறிந்தோம். அவ்வித மெண்ணுதலிலும் இதயம், நாபி, புருவநடு என்னும் மூன்று இடத்தையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானம் ஆகக் கருதிப் புறம்பே ஞான பூசை செய்யும் முறைமைப்படி இதயமாகிய தாமரையில் சிவபெருமானை அவ்வைந்தெழுத்தால் அமைந்த திருமேனியில் கொல்லாமை, ஐம்பொறி யடக்கல், பொறையுடைமை, இரக்கம், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் எண்வித மலர்களைக் கொண்டு அவ்வைந்தெழுத்தால் பூசை செய்து குண்டலிக் கிடமாகிய நாபியில் ஞான அனலை எழுப்பி அதனிடத்தே அவ்வைந் தெழுத்தால் விந்துத்தானத்து அமிழ்தமாகிய நெய்யைச் சுழிமுனை நாடி, இடை நாடி ஆகிய சுருக்குச் சுருவங்களால் ஓமஞ் செய்து விந்துத்தானமாகிய புருவ நடுவில் சிகார யகார வகாரங்களை முறையே தற்பதப் பொருளும், துவம் பதப் பொருளும், அசிபதப் பொருளும் ஆகின்ற முறைமையில் அவ்வைந் தெழுத்தால் சிவோகம் பாவனை செய்யில் உயிர் அப்பொழுதே அங்ஙனம் விளங்கித் தோன்றும் முதல்வனுக்குச் சேட சேடிய பாவத்தால் ஆகற்பாலதாகிய அடிமையாம் என்க.

இவ்விதம் இறைவனை இதயத்தினிடத்தே ஐந்தெழுத்து ஓதுகின்ற முறையால் உயிரொன்று காணுமாயின் கோலொன்றினை நட்டுக் கயிற்றினால் சுற்றிக் கடையுங் காலத்து விறகினிடத்தே நின்று தோன்றும் அக்கினியைப்போல் முதல்வனாகிய சிவன் அவ்விடத்துக் காணப்பட்டு அறிவுக் கறிவாய் விளங்கிநிற்பன். இது கருதியே சமயாசாரியராகிய திருநாவுக்கரசு சுவாமிகளும்,

"விறகிற் றீயினன் பாலிற்படு நெய்போல்
மறைய நின்றுளன் மாமணிச் சோதியான்
உறவுகோல் நட்டு உணர்வு கயிற்றினால்
முறுக வாங்கிக் கடைய முன்னிற்குமே"

என்று அருளிச் செய்தனர். இவ்விதம் அருளிச் செய்த திருநாவுக்கரையர் இவ்வைந்தெழுத்தானது ஓதியுணருகின்ற ஒருவனுக்கு நல்ல துணையாகும். வேறு துணையிதற்கு மேலில்லை என்று எடுத்துக் காட்டுவார், தாம் சமணர்களால் கல்லோடு கட்டிக் கடலில் இட்ட காலத்துத் தமக்கு ஐந்தெழுத்தால் நேர்ந்த துணையை எடுத்துக் காட்டுவார் போன்று,

"சொற்றுணை வேதியன் சோதி வானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே,"

என்று அருளிச் செய்தனர். அவ்வளவோடு நில்லாது தம்மைச் சமணர்கள் நீற்றறையி லிட்ட காலத்து விதிப்படித் தாம் ஐந்தெழுத்தை ஓதியதால் பதி தண்ணிழலாயதை எடுத்துக் காட்டுவான் வேண்டி,

" மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவண்டறைப் பொய்கையும்போன்றதே
ஈசன் எந்தை யிணையடி நீழலே "

என்று அருளிச் செய்தனர். இத்திருவைந் தெழுத்தானது, ஊழ்மாறு கொண்ட காலத்தும் உதவி செய்ய வல்லதோ என்று ஐயுறுவார்க்கு அவர் தம் ஐயத்தைப் போக்குவார் போன்று காழி நகர் வள்ளலாகிய திருஞான சம்பந்த சுவாமிகள் தாம் அருள் செய்த ஐந்தெழுத்து உண்மையுள்,

" துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்திலும்
நெஞ்சகம் நைந்து நினைமின் நாடொறும்
வஞ்சகமற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன ஐந்தெழுத்துமே "

என்று மார்க்கண்டேயரை மறலி தடிந்த காலத்து அவ்வூழினைக் கருதாது இறைவன் மறலியை உதைத்து மார்க்கண்டேயனைக் காத்தான் என்று ஐந்தெழுத்து ஓதுவார், 'ஊழையும் உப்பக்கம் காண்பர்' என்பதை அறிவித்தனர். இவ்வுண்மையை உலகோர் அறிய வேண்டுமென்று கருதியே திருநாவலூரர் தம் தேவாரத்துள்.

" அந்தணாளன் உன் அடைக்கலம் புகுத
அவனைக் காப்பது காரணமாக
வந்த காலன்றன் ஆருயிரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மை
[கண்டடியேன்
எந்தை நீயெனை நமன் தமர்நலியின்
இவன்மற்று என் அடியானென
[விலக்குஞ்
சிந்தையால் வந்துன் திருவடியடைந்
[தேன் செழும்பொழில்
திருப்புன் கூருளானே "

என்று கூறினார். இச்சுந்தர மூர்த்தி சுவாமிகளும் இனிப் பிறப்பறுப்பதற்கு ஐந்தெழுத்தினும் வேறு மருந்தில்லையென்பார் தாம் அருளிய நமச்சிவாயப் பதிகத்துள், "மற்றுப் பற்றெனக்கின்றி நின்திருப்பாதமே மனம் பாவித்தேன் பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன் கற்றவர் தொழுதேத்துஞ் சீர்க்கறையூரிற் பாண்டிக் கொடுமுடி நற்றவா உனை நான் மறக்கினும் சொல்லு நா நமச்சிவாயவே" என்னும் இப்பாசுரத்துள், 'பிறந்தேன் இனிப் பிறவாத தன்மை வந்தெய்தினேன்' என்று அருள் செய்தனர். இக்கருத்துப் பற்றியன்றோ நம்மருட் பெருந்தகையாகிய மணிவாசகப் பெருமான் தமது திருவாசகத்துள்,

" தனியனேன் பெரும் பிறவிப்
பௌவத் தெவ்வத்
தடந்திரையா லெற்றுண்டு
பற்றொன் றின்றிக்
கனியைநேர் துவர்வாயா
ரென்னுங் காலாற்
கலக்குண்டு காமவான்
சுறவின் வாய்ப்பட்
டினியென்னே யுய்யுமா
றென்றென் றெண்ணி
அஞ்செழுத்தின் புணை
பிடித்துக் கிடக்கின்றேனை
முனைவனே முதலந்த
மில்லா மல்லற்
கரைகாட்டி யாட்கொண்டாய்
மூர்க்க னேற்கே "

என்று ஐந்தெழுத்தைப் பிறவிப்பெருங் கடல் தாண்டும் புணை என்று உவமை கூறினர். அவ்விதம் ஐந்தெழுத்தை ஓதுதலை இவ்வாறு ஓதுதல் வேண்டுமென்பதற்கு, நம் திருஞானசம்பந்தப் பெருமான்,

" காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி
ஓதுவார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேத நான்கினும் மெய்ப்பொருளாவது
நாத நாமம் நமச்சி வாயவே "

என்று கூறுவா ராயினர். ஆதலால் இவ்விதம் எழுந்த சந்தான குரவர் திருவாக்குகளாலும், சமய குரவர்கள் திருவாக்குகளாலும், ஐந்தெழுத்தே ஞானம்பூண்ட உயிர் ஒன்றற்குத் துணையாக நின்று பிறவியென்னும் கடலைத் தாண்டி முத்தியென்னும் கரையைச் சேர்வதற்கு உற்ற துணையாக உள்ளது என்று ஐந்தெழுத்தின் உண்மை அறிந்தோமாதலால் முன்னை நல்வினைப் பயனால் சித்தாந்த சைவராகத் தோன்றிய நாம் இவ்வைந்தெழுத்தை முறைப்படியோதி அவன் திருவடி நீழல் அடைவோமாக. சிவம்.



---

# சமய உணர்வும் ஆராய்ச்சி யறிவும்

[காழி. சிவ. கண்ணுசாமி, B. A.]

அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சித் தாய இந்நிலப் பரப்பில், மகனெனப் பிறந்த ஒவ்வொருவனும் தானும் ஒரு சிறு அணுப்பகுதியாயமைந்தவன் என்பதுணர்ந்து தன் செயல்கள் தன்னையன்றித் தான் வதியும் அண்டத்திற்கு மேற்றவாறு இருத்தல் வேண்டுமென ஒரு நியதி யமைத்துக் கொள்வதே சமய உணர்வென்பதும், அத்தகைய சமய உணர்வு உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பற்றுக்கோடாகும் என்பதும் முன்னர்க் கூறினும். மக்களையும் மாக்களையும் வேற்றுமைப் படுத்திப் பிரித்து நிற்கும் உயர்வின் மிக்க நல்லறிவு (அஃதாவது திருந்திய சமய அறிவு) படைத்த ஒவ்வொருவரும் சமயம் என்பது இன்னதென உணர்ந்ததும் அவ்வாறே.

இனி, அனைத்தையும் படைத்து அளித்துத் துடைக்கும் ஒப்பற்ற பரம்பொருளாய இறைவன் ஒருவனுளனெனக் கொண்டு அவனை நித்தலும் ஏத்தி ஏத்தித் தொழுதும், ஆண்டவனைக் கொண்டு அடிமை பூண்டொழுகியும் வருதலே பொது வகையாற் கூறுமிடத்துச் சமய ஒழுக்கமென வழங்கி வருவதாகும் என்று ஒரு சாரார் கூறினர். அவ்விறைவனை யெம்முடன் பிணித்து நிற்கும் அறப் பிணிப்பே சமயமெனப் பண்டு தொட்டுப் பயின்று வருவதாகும் என்பது அவர் தந் துணிபாகும். " அவனன்றி யோரணுவு மசையாது " என்னும் ஆப்த மொழியின் கருத்துணர்ந்து அவனடியே பிறவிப் பெருங்கட னீந்தும் ஏமப் புணையாகக் கருதி யொழுகலே சால்பெனத் தெளிந்த அறிவு நிலையே சமயமெனக் கூறினரு முளர். பற்றற்று நின்றானது தாளினைப் பற்றி, மக்கள் பாழ்த்த பற்றறுக்க முயலு மெய்ந்நெறியே சமயமெனக் கூறினரு முளர். எப்பொருள் எவ்வெவர் வாய்த் தோன்றினும் அப்பொருளின் மெய்ப் பொருள் யாதெனக் கூர்த்தறியும் உண்மை யறிவு துணையாக உயிர் எய்தக் கடவதாய விழுப் பயனை யடைவதே சமயம் எனவும் ஒரு சாரார் கூறிப் போந்தனர். உலகுக்கு முதலாய "அவனெம் பிரானென்ன, நானடியேனென்ன புவனெம் பிரா"னை யுணர்ந்து அவனே பசுபதி; அவன் கருணை வயத்தா னூட்டுவிக்கப்படும் பசுக்களாய மக்களெல்லாம் அவன் வழி நின்று பணி செய்து அவர்க்குந் தமக்குமுள்ள விழுமிய தொடர்பை யறியும் பரிசே சமயமாகும் [illegible] துக் கூறுநின்றாரு[illegible]

இக்கூற்றுக்களால், சமயம் என்பது ஆதியு மந்தமு முடைய ஆறறிவினர்க்கும் ஆதியுமந்தமு மில்லா வரும்பெருஞ் சோதியாய பரம்பொருட்கு மிடையே நிகழ்வதோர் தெய்விகத் தொடர்புணர்ச்சியா மென்பது பெற்றாம். இவ்வுணர்ச்சி தானும் நாடுகடோறும் வேறுபட்டும் காலங்கடோறும் மாறுபட்டும் காணப்படுவ தொன்றாகும். எனினும் யாக்கையானாய பயனென் என்பதை மக்கட்கு இம்மண்ணுலகில் இவ்வுணர்ச்சியே வரையறுத்துக் காட்டா நிற்கும். அக்காட்டப்பட்டதை அவரவரது அறிவுத் திறத்திற் கேற்றவாறு உய்த்துணர்ந்து அதன் வழி அவரவர் தம் வாழ்க்கைச் செயல்களை அமைத்துக் கொள்வ தியல்பாம்.

உலகத் துதித்த பல்வேறு சமயங்களில் எஞ் சாயமே இறைவன் உகந்தருளியது ; எஞ் சமயத்தாரே உரிய அடியாராய் அவனால் தேர்ந்தெடுக்கப் பட்டாராகும் ; ஆகவே இறைவன் எம்மாட்டு அளவின் மிக்க பேரருளால் வைத்த இந் நம்பிக்கை கெடாவண்ணம் யாம் அவனாணைப்படி யொழுகல் வேண்டும் என யூதர்கள் கூறுவர். இதையே தான் ஜோனாதன் ஸிவிப்ட் என்ற ஆங்கில வாசிரியர் " இறைவன் தண்ணருட் குரியேம் யாமே ; குறையுடைப் புறத்தார்க்குரியது நரகம் ; துறக்கந் தனிலவர்க் கொதுங்கிடமில்லை ; நெருக்கம் வேண்டேம் நீனிற விசும்பில் " என விளையாட்டாகக் கூறினர் போலும் ! முழு முதற் பொருளின் துணைக் கருவிகளா யமைந்து இவ்வுலகில் அவர் தம் அருந் திறலாட்சியை நடத்தி வருங் கடவுளர் உளந் திறம்பாவாறு ஒழுகுவதே சமயச் சால்பாகும் எனக் கூறினர் இயவனர், " நானே கடவுள் " என்ற தத்துவம் பற்றி, நானிறுதியில் அவனுடன் ஒன்றாகக் கலத்தற் குரியவாறு வேண்டுதல் வேண்டாமை யகற்றி வாழ்வதே சமயங் கற்பிப்பதாகும் என்பர் ஒரு கூட்டத்தார். அவாவென்பது எல்லா வுயிர்க்கு மெஞ்ஞான்றும் தவாப் பிறப்பீனும் வித்தாக யிருத்தலால் ஆரா வியற்கைத்தாய அவ்வவா நீப்பின் அந்நிலையே பேரா இயற்கைத் தாய நிர்வாண மெய்து நிலையாம் எனப் புத்த மதத்தினர் கூறுவர். இவ்வாறே ஏனையோருந் தாந் தாமுணர்ந்தவாறியைந்துக் கூறுவர். எனவே ஒவ்வொருவரும் பரம்பொருளுண்மையும் மக்கட் பிறப்பின் உண்மை நிலையும் இன்னதெனத் தம்மறிவுத் திறனுணர்ந்ததற் கேற்பத் தஞ்செயலை யமைத்துக் கொள்ளும் தொடர் புணர்ச்சியே சமயமென்பது பெற்றாம்.

இனி, இறைவனுக்கும் உலகத்துயிர்க்கு மிடையே இத்தகையதோர் தொடர்பை யுணர்த்தி நிற்காத சமயம் சமய மன்று. அதனா னன்றோ இறைவ னொருவனுள னென்பதை மறுக்கும் உலகாயதத்தை மற்றையோர் எட்டியுஞ் சுட்டியுங் கூறலுற்றார் ? அன்றியும், இறைவனுக்கும் உயிர்க்கும் ஒருவகைத் தாய தொடர்புளதென் றுணர்த்தினும் அதை அறிவுக்கு மளவைக்கு மேற்றவாறு நிலை நாட்டிக் காட்ட மாட்டாத ஓர் சமயமும் சமய மாகாது ; அது சமயப்போலி என்றே அழைக்கப்படும்.

மேலும், ஆருயிர்க்கு என்போடியைந்த தொடர்பு அன்போடியைந்த வழக்கே யாதலால் மன்னுயிரோம்பி அருளாளும் வகை யுணர்த்தா ஒரு சமயமும் சமய மாகாது.

எனவே, மேற்கூறிப் போந்தவாற்றால், அறிவுக்கும் அளவைக்கும் பொரு



ந்துமாறு மகனுக்கும் மற்று முள்ள ஓரறிவு முதல் ஆறறிவு படைத்த எண்ணில் பல் கோடி யுயிர்கட்கும் அன்பானாய அருட் டொடர்பு கற்பித்து, அவ்வியல்பே பல்லுயிர்க்கு மிறைவனாய் அன்பே யுருவாய் அருட் கடலாய்ப் பிறங்கும் இறைவன்றாளை மகன் எளிதிற் றலை வணங்குநெறி யுணர்த்தி, அவனது செயல்களை நல்லாற்றுப்படுத்துவிக்கும் இயல்பிற்றாய தெய்விகத் தொடர்பா யமைவதே உண்மைச் சமயமாகும் என்பது போதரும்.

# " நாட்டின் முன்னேற்றமும் நமது சமயமும் "

[வித்துவான் - A. வரதநஞ்சைய பிள்ளை அவர்கள்]

இப்போது, நம் நாட்டின் ஏழ்மை நிலைக்குற்ற காரணங்களைத் தேர்ந்து கண்டு நீக்கி, ஏனைத் தேயங்கள் போல் நம் தேயத்தையும் பொன் கொழிக்கும் நாடாக்க முற்பட்டுப் பொது நலத் தொண்டாற்றுங் கடப்பாடு மேற்கொண்ட மேதாவிகளிற் சிலர், நமது சமயக் கோட்பாடுகளும் தேய முன்னேற்றத்திற்குத் தடையாய் உள்ளதெனக் குறை கூறிச் சமயாசாரியர்களையும் குற்றங் கூறி நிந்திக்கத் துணிந்து அற்ப சொற்பமுள்ள சமயப்பற்றையும் அறத்தொலைக்க வழி தேடுகின்றனர். ஆகவே, அவர்கள் கூறும் வண்ணம் நாட்டின் முற்போக்குச் சமய நெறி ஒழுக்கங்களால் தடைப்படுத்தப் படுகின்ற துண்மைதானா ? என ஆராயும் தலைக்கடன், சமயப் பற்றும் நம்பிக்கையு முடையார் பலரையும் வற்புறுத்தி நெருக்குவ தாயிற்று. தேசாபிமானிகள் உபதேசப்படி நாட்டின் பொது நன்மைகளுக்குச் சமயங்கள் தீராப் பகைகளாக விருப்பின், சமயங்களை முழுதும் கைவிட்டே நாட்டின் வளம் பெருக்கலாமா ? அல்லது, அச் சமயங்களில் ஏற்பன சிலவற்றை மட்டும் வைத்துக் கொண்டு ஏலாதனவற்றை ஒழித்து விட வேண்டுமா ? சமயக் கொள்கைகளில் யாதொரு மாறுதலும் செய்யாமலே நிறைவேற்ற முடியுமா ? என்னும் பகுதிகளை ஆராய்ந்து ஒரு வகை முடிவுக்கு வரல் குறித்த நோக்கத்தோடு இக்கட்டுரை கிளம்புகின்றது.

தேசீய வாதிகள் தமது புனித நோக்கத்திற்குப் பெருந் தடைகளாகச் சமயங்களிற் காணுங் குறைபாடுகள் எவை? என்பதனை முதலிற் கவனிப்போம். அவைகள் பின் வருவனவற்றுள் அடங்கும்.

(1; சமய ஒழுக்கங்கள், உண்மை இன்னதென வரை யறுக்கப் படாதவும் பயனற்றவுமான பலவகைச் சடங்குகளுக்கென ஒரு குலத்தார்க்கே நமது அரும் பெரும் பொருளைச் சூறையிடுவித்துப் பன்னாள் பட்டினி கிடக்கும் பல ஏழைகட் குதவாமற் செய்கின்றன.

(2) அவர் தீண்டப்படார். இவருடன் இவர் பார்க்க உண்ணிற் பாவம் நேரும். கடவுள் சபிப்பார். நாம் உயர் குலத்தேம். உயர்ந்த மதத்தினேம். பிறரெல்லாரும் தாழ்குலத்தோர். பொய்ச் சமயப் புல்லியர் என வேற்றுமை பெருக, ஒருவர்பாலொருவர் கொள்ளும் இயற்கை அன்பையும் இரக்கத்தையும் தொலைத்து, தன்னலம் பாராட்

டும் தருக்கை மிகுவித்து நாட்டின் முற்போக்கை மறைத்து விடுகின்றன.

(3) ஆலயங்களின் பிரதிஷ்டை, கும்பாபிஷேகம், சந்தர்ப்பணைகள், மணவினை பிணவினைச் சடங்குகள், என நமது பொருட்களைப் பல வழிகளால் ஒரு வருணத்தினர்க்கே யாக்கி, அவர்கள் ஆக்கங் கருதி அவர்களாலேயே படைக்கப்பட்ட கற்பனைகளைத் தாங்கி நம்மை வறுமைக் கடலிற் புக விடுகின்றன.

(4) இக்காலத்திற்குச் சிறிதும் ஏற்றதல்லவாயுள்ள பழங் கதைகளையும், பொய்யே திரண்டு தோன்றும் புராணங்களையும் படித்து, நாட்டின் வர்த்தமானங்களை நினையாமலும் அறிய அவாவாமலும் எந்நேரமும் கடவுள் கடவுள் என்று பிதற்றித் தேச க்ஷேமத்திற் கண்ணும் கவலையு மின்றி வாளா நாள்கழிக்கப் பலரைத் தூண்டிவிடுகின்றன என்பனவும் இவை போன்ற பிறவுமாம். இவர்கள் கூறியவாறு நம் சமயமும் புகன்றுளதோ? இல்லையேல் வேறியாது கூறுகின்றது என்று சிறிதாராய்வோம்.

மேற் போக்காக வன்றிச் சமய நூல்களைக் கருத்து விளங்க ஆழ்ந்து கற்றுப் பெற்ற திட்ப நுட்பங்களை உலக அநுபவத் தோடும் யுக்தியோடும் பொருந்த ஆராய்வோமானால் எவ்வாற்றானும் அவை நாட்டின் முன்னேற்றக் கால்களுக்கு விலங்காவன வல்ல என அறியலாம். முதற்கண் எல்லாச் சமயங்களும் முதற் பாடமாக நல்லொழுக்கத்தையே மிகவும் வற்புறுத்துகின்றன. பொய் கூறற்க, பிறரைக் குறைகூறாதே, இயன்றமட்டும் காவின்றி ஏழை எளியோர்க்கிரங்கி உபகாரம் செய், பிறர் நன்றியை மறவற்க, கடுஞ் சினங்கொள்ளேல், பிறன்மனை விழையாதே, நீ எம்மட்டும் பணிவும் அடக்கமும் கொண்டிருப்பாயோ அம்மட்டும் பிறரால் நன்கு மதிக்கப் பெறுவாய் என்றின்னோரன்ன பல நீதிகளைப் போதிக்கின்றன.

எந்தச் சமயங்களேனும் உயிர்க்குறுதி பயக்கும் இவ்வறங்களை மறுக்கின்றனவா? இல்லை; இல்லை.

பின் இரண்டாவதாக இவ்வுலகமும், உடலும் வாழ்வும் காலந்தோறும் மாறி வருதல் கண் கூடே. ஆதலின் உள்ள பொழுதே பிறர்க் குதவி செய்து நற்பெயர் பெற்று வாழ் நாட்களை இனிதே கழிக்கக் கடவாய் என அறிவூட்டுகின்றன. இதனினும் ஒருவன் அறிவதும் செய்வதும் பிறிதென்ன வுண்டு?

மூன்றாவதாக இவ்வுலகத்தை ஆக்கிக் காத்தழிக்கும் முழுமுதற் கடவுள் ஒருவ ருண்டு. அவர் எல்லாம் வல்லவர். பரம கிருபா நிதி. உயிர்கள் அவரை அன்பினால் வழிபட்டா லன்றிக் கவலையற வாழ முடியாது. அவர் பொன்னடித் தாமரைகளே நமக்குப் புகலாவது; மாறா இன்பந் தர வல்லது. ஆகலின் அவரை மறவாது நினைத்து வணங்குக, என்கின்றன.

தெய்வங்களின் பெயரையும், வீடு பேற்றிற் குரிய வழிகளையும், உயிர்களின் இலக்கணங்களையும், கடைப்பிடித் தொழுகும் ஒழுக்கங்களையும் அவ்வச் சமயங்கள் அபிப்பிராய பேதங் கொண்டு கூறினும், முற் கூறிய பொது விஷயங்களில் ஒன்றோ டொன்று இணங்குவனவே யன்றிப் பிணங்குவனவல்ல என்பது பல சமயக் கூறுகளையும் நன்கு கற்றாராய்ந் தோர்க்கு விளக்கமாம்.



ஏனைச் சமயங்களினும் பார்க்க நம் சைவ சமயத்து இன்னும் பல உண்மைகளும் உயர்ந்த கருத்துக்களும் மிக்குள்ளன. அவற்றை மேற்கோளுடன் விளக்குவாம்.

“ஒன்றென்றிரு தெய்வமுண்டென்றிரு” (பட்டினத்தடிகள்.) “எவ்வுயிரும் என்னுயிர்போ லெண்ணி யிரங்கவும் நின்-தெய்வவருட் கருணை செய்யாய் பராபரமே” (தாயுமானவர்.) இத்திவ்யோபதேசங்கள், ஒரே கடவுள் உண்டு என நம்பும்படியும் எல்லா வுயிர்களையும் தன்னோடு சமானமுறப் பாவிக்கும்படியும் கூறுகின்றன. இனி எந்தக் கடவுளை வழிபடினும் அவ்வவர் குறிப்புக் கேற்ப அவ்வொரு கடவுளே தோன்றி யருள்கின்றார். “யாதொரு தெய்வங் கொண்டீரத் தெய்வமாகி யாங்கே மாதொரு பாகனார் தாம் வருவர்” (சிவஞானசித்தியார்)

எவ்வெச் சமயிகளும் கூறும் பகுதிகளனைத்தும் ஒரு முழு முதலைக் குறிப்பனவே யன்றி வேறன்று.

“ஆறொன்றிய சமயங்களினவ்வ வர்க்கப்
பொருள்கள் -வேறொன்றிலாதன”
—அப்பர் சுவாமிகள்.

“குலவா நின்ற - ஆறனைத்தும்புகுங்
கடல்போற் சமயகோடி யத்தனையுந்
தொடர்ந்து புகும் ஆநிநட்பே”
—தாயுமானார்.

ஓர் உயர்ந்த மலையினுச்சியை அடையக் குறிக்கொண்டேர்ந்து செல்லும் பல எறும்புக்கூட்டங்கள் போன்று எல்லா வுயிர்களும் இன்ப வாழ்வு வசிக்கும் இடத்தைச் சாரப் பல சமய நெறிக்கட் சென்று கொண்டிருக்கின்றன. அவை இறுதியில் ஒரு முடிந்த முடிபையே அடைவன. ஆதலின் ஓர் சமயம் உயர்ந்தது, மற்றோர் சமயம் தாழ்ந்த தெனல் அறிஞர்க் கடாது.

“புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம்
புக்கும் ......
சிறப்புடைய புராணங் களுணர்ந்தும்
வேதச்சிரப் பொருளை மிகத்தெளிந்துஞ்
சென்றாற்சைவத் - திறத்தடைவர்”
—சிவஞானசித்தியார்.

சாதி, குலம் முதலியவைகள் உலக விவகாரங்களுக்கென ஏற்பட்டுள்ளன. கடவுளை உணரும் நிலைக்கண் அவை வேற்றுமை யற்றொழியும். இதனைப் பிரமசரியம் முதலிய மூன்று நிலைமையையுங்கடந்த ‘அதிவர்ணாச்சிரமி’ என்னும் ஆசிரமத்துக்கு ஜாதிவேற்றுமை யின்று எனக் கூறப் படுதலானும் உணர்க.

“சாதி, குலம்பிறப் பென்னும்
சுழிப்பட்டுத் தடுமாறும், ஆதமிலி.”
—திருவாசகம்

“சாத்திரம் பல பேசுஞ் சழக்கர்காள் [வீர்”
கோத்திரமும் குலமுங் கொண்டென்செய்
—அப்பர் சுவாமிகள்

எல்லாச் சாதியும், ஒரு தன்மையவே. அவ்வவர் செய்யுந் தொழிற்களாற்றான் அவ்வாறு பகுக்கப்படுகின்றன.

“பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்கும் [யான்.
சிறப்பொவ்வா செய் தொழில் வேற்றுமை
—திருக்குறள்

தீண்டாதாரும் கடவுள் அன்புடையரானால் போற்றற் குரியரே.

“ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார்சடைக் கரந்தார்க்
கன்பராகிலவர் கண்டீர்யாம்
வணங்குங் கடவுளாரே”
—அப்பர் சுவாமிகள்

யாவர் ஈசன்பா லன்புடையரோ அவர் எல்லா வுயிர்கள் மாட்டும் அன்புடையராதல் தெளியப் படுவர், இவ்விரண்டு மில்லாதார் தமக்குத்

தாமே அன்புடையரு மாகார். தம் முயிர்க் காக்கத்தைச் செய்யாமையின்.

“ஈசனுக் கன்பில்லார் எவ்வுயிர்க்கு
மன்பில்லார் தமக்கு மன்பில்லார்”

“அறிவினா னாகுவதுண்டோ பிறிதினோய்
தன்னோய்போற் போற்றாக் கடை”

உயிர்களையே இறைவன் கோவிலாகக் கொண்டுள்ளார். இறைவனுக்கு, எல்லா வுயிர்களும் ஒருவகைத் திருமேனிகளே. இலிங்கத்துக்கு வழிபாடாற்றலினும் எல்லா உயிர்கட்கிதம் செய்வதையே பெருமான் உவந்தேற்கின்றார்.

“எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும்
இலங்குமுட லுயிரனைத்து மீசன்கோயில்”

“அருளே திருமேனி ஆன்மாத் திருமேனி
குருவே திருமேனி கொள்”

“படமாடக் கோயிற் பகவற்கொன் றீயின்
நடமாடக் கோயி னம்பர்க் கங்காகா
நடமாடக் கோயி னம்பற் கொன்றீயிற்
படமாடக் கோயிற் பகவர்க்கு மாமே”

தத்தமக் குரிய ஒழுக்கங்களில் வழுவினோர் பிறப்பாற் சாதி கொண்டாடுதல் பிழை.

“சூத்திர னொழுக்கமுறின்
மறையோனாவான் சூத்திரனாப்பான்
மறையோனொழுக்கம் விட்டால்”

எல்லா வுயிர்க்கும் தண்ணருள் பூண்டோர் தாம் அந்தணர்.

“அந்தணர் என்போர் அறவோர்
மற்றெவ்வுயிர்க்குஞ்
செந்தண்மை பூண்டொழு கலான்”

இவ்வந்தணர் என்பதனை அந்த - அணர் எனப்பகுத்து வேதமுடிவை (கடவுளை) அணுகுவோர் என ஆசிரியர் நச்சினார்க்கினியர் மதுரைக் காஞ்சியிற் கூறுவர்.

நல்லோர்க்கும் அந்தணர்க்கும் அறம் புரிக ஈக, எனக் கூறுவ தன்றி எத் தொழில் புரியினும் பிறப்பால் மட்டும் பேர் கொண்டார்க்கும் வழிபாடாற்றச் சமயங்கள் புகலா. ‘பேர் கொண்ட பார்ப்பான் பிரான் அருச்சனைக் கூகதவான்’ எனத் திருமூலர் கண்டிக்கின்றார்.

தானம் முதலியவைகளைத் தக்கார்க்கே ஈதல் வேண்டும். அல்லாதார்க்களித்தல் ஒவ்வாது. அறப்பயனுந், தான் சிறிதாயினும் தக்கார் கைப் பட்டக்கால் - வான் சிறிதாப் போர்த்துவிடும். “ஞானமுன்னிய நான்மறையாளர் கைத்தான மென்னத் தழைத்தது நீத்தமே.”

விரிவஞ்சிக் கூறிய மேற் கருத்துக்கள் தேசப் பொது நன்மைக்குத் தடை செய்வனவா? கூறுங்கள்! சமயங்களின் மீதுப் சாத்திரங்கள் மீதும் ஏற்றுங் குறைகளை உண்மை யுணர்ந்தார் அறிவின்மேற் சுமத்தலே நீதி.

சமயங்களில் குருட்டு நம்பிக்கையான மொழிகள் ஒன்று மில்லை. புராணங்களிலும் ஏனை மக்களின் பழக்க வழக்கங்களிலும் ஏற்பன கொண்டு ஏலாதவற்றை அறிவுடையார் ஆய்ந்து நீக்கக் கடவர்.

அவலைச் சாக்கிட்டு உரலை யிடித்தல் போல, சிலரிடத்துக் காணும் குறைபாடுகளை முன்னிட்டுச் சமயங்களில் வெறுப்புக் கொள்வது முறை யன்றாம்.

அன்பர்காள், தொன்று தொட்டு வரும் ஆன்றோர் அநுபவ முறைகளில் பொது நலத் துவேஷம் சிறிதேனும் விளையாது நிச்சயம் என இதனுடன் நிறுத்தி நம் நாட்டின் முன்னேற்றத்தின் பொய்ம்மைத் தடைகளைச் சிந்தித்து இக்கட்டுரையை முடிப்பாம்.

(தொடரும்)

# செய்தித் திரட்டு

## மிருகங்களின் பாரம்

சிங்கங்களைப் பார்க்கிலும் புலிகள் பாரமுள்ளவை. புலிகளைப் பார்க்கிலும் காடிகள் பாரமுள்ளவை. வடதுருவத்திலுள்ள சில காடிகள் ஒவ்வொன்றும் அரைடன் நிறையுள்ளவைகளாயிருக்கின்றனவாம்.

## உலகத்தில் அதிகம் உயர்ந்த பாலம்

தென் ஆபிரிக்காவிலுள்ள விக்டோரியா என்னுமிடத்தில் ஓர் அருவி வீழ்ச்சியுண்டு. அவ்வருவி விழுமிடத்திற்கணித்தாகக் கட்டப்பட்டுள்ள புகைரதப் பாலமே உலகத்தில் அதிகம் உயர்ந்தது. அது தண்ணீருக்கு மேலே 400 அடி உயரத்திலிருக்கின்றது.

## திண்டுக்கல்-பொள்ளாச்சி ரயில்

திண்டுக்கல் பொள்ளாச்சி இருப்புப்பாதை திறப்புவிழா நவம்பர் மாதம் 20 உ நடைபெறுமெனத் தெரியவருகிறது.

## கிறிஸ்தவர் வேலை

இந்தியா முழுமையிலும் ஒன்பதினாயிரம் பாதிரிகள் இருக்கின்றார்கள். சம்பளம் பெற்று வேலை செய்பவர்களாக நாற்பத் தொன்பதாயிரம் தொண்டர்களும் ஏழுலட்சத்து நாற்பதினாயிரம் சில்லரை வேலைக்காரர்களும் இருப்பதாகத் தெரியவருகிறது. சைவ சமயத்தைப் போற்றி வளர்க்கவும், பிரசாரம் செய்யவும் எவ்வளவு பேர் இருக்கின்றார்களென்று தெரியவில்லை. தலைவர்களாக விளங்கும் மடாதி பதிகள் முதலியவர்கள் சைவ சமயத்தை அபிவிருத்தி செய்ய முன் வருவார்களாக.

## இருதலைக் குழந்தை

மாண்டலேயில் மார்த்தா என்ற ஒரு பர்மிய ஏழைப் பெண்ணுக்குச் சென்ற மாதத்தில் இருதலைக் குழந்தை ஒன்று கர்ப்பத்திலேயே இறந்து பிறந்தது. அத்தலைகள் இரண்டு கழுத்துடன் சேர்ந்த தலையோடும், ஒவ்வொரு தலைக்குரிய அவயவங்களோடும், ஒருடலுடனும் இரண்டு கைகளுடனும், இரண்டு கால்களுடனும் இருந்தது. அக்குழந்தையை தைலத்தில் போட்டு ஓர் வைத்திய சாலையில் கண் காட்சியாக வைத்திருக்கின்றார்களாம்.

## பொன்மதி

[சத்திய நேசன்]

ஜப்பான் தேசத்துத் தாய்மார்கள் தங்கள் பெண்களைக் கலியாணஞ் செய்து கொடுக்கையில் அவர்கட்குப் பின் கண்ட புத்திமதிகளைப் போதிப்பார்களாம் :—

1. விவாகம் முடிந்த நிமிஷம் முதல் நீ என் பிள்ளையல்ல, உன் மாமி மாமன்மார் தான் உன் தாய் தந்தையராவர், இதுவரை நீ எங்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததுபோல இனி அவர்களுக்குக் கீழ்ப்படிவாயாக, மாமியாருக்குப் பட்சம் காண்பிக்க மறவாதே.

2. பெண்களின் மேலான ஆபரணம் புருஷன் சொல் மீறாமை, உன் புருஷன்தான் உன் எஜமானன், அவனிடம் தாழ்ச்சி மரியாதையோடு நடந்துகொள்.

3. பெருமை பாராட்டித் திரியாதே. பெருமையானது உன் புருஷனுக்கு உன் பேரிலுள்ள பட்சத்தை நீக்கிவிடும்:

4. கணவனுக்கு முன் கடுஞ்சொல் கூறாதே, பெண்டிர்க்கழகு எதிர்பேசாதிருத்தல். பொறுமையை நேசி, பொறுத்தார் பூமியாள்வார் தக்க சமயம் வாய்க்கும்போது சொல்லவேண்டியதைப் பட்சத்தோடுசொல்.

5. பேச்சுக்காரி என்று பெயரெடாதே, அதிகம் பேசுகிற பெண் அரைக்காசுக்குதவமாட்டாள். பேச்சு அதிகப்பட்டால் பொய் புறளிகள் அதிகரிக்கும், பேசாதிருந்தால் பிழையொன்றுமில்லை.

6. ஜோசியனை அழைத்துக்குறிகேளாதே, சகுண சாஸ்திரம் பார்க்கும் பெண் தனக்குத் தானே சத்துருவாகிறாள்.

7. வீட்டுக்காரியங்களை விவேகத்துடன் நடத்தி வரவுக்குத் தகுந்த செலவுசெய்.

8. ஆஸ்திக்காரன் மகளாயிருந்தாலும் அகங்காரங் கொள்ளாதே. உன் ஆஸ்தியைப் பற்றிப் பிறர் கேட்கப் பேசாதே. தற்புகழ்ச்சி தகுதியென்று உன் புருஷன் உறவின் முறையாரை இகழாதே.

9. வலிய வந்திடினும் வாலிபர் சினேகம் வேண்டாம்.

10. பல வர்ண உடுப்பு உடுக்காதே, எப்போதும் சுத்தமான உடை அணிந்துகொள்.

மேற்கண்ட பத்துக் கற்பனைகளை அனுஷ்டிக்காத பெண்கள் இழிகுலத்தவர் என மதிக்கப்படுவார்களாம்.

187125

# சைவ சித்தாந்த மஹா சமாஜம்—சென்னை.

## 1928-ஷ செப்டம்பர் மாதத்திய வரவு செலவு கணக்கு.

### வரவு

| விவரம் | செப்டம்பர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 30-9-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 88 | 0 | 0 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 57 | 0 | 0 |
| சித்தாந்தம் சந்தா வசூல் ... | 24 | 12 | 0 | 786 | 14 | 0 |
| சித்தாந்தம் அச்சிட நன்கொடை ... | ... | ... | ... | 365 | 0 | 0 |
| விளம்பர சார்ஜ் ... | 5 | 0 | 0 | 11 | 0 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு நன்கொடை ... | ... | ... | ... | 35 | 0 | 0 |
| வி. பி. தபால் வரவு ... | 0 | 15 | 0 | 27 | 8 | 0 |
| சந்தா முன் பணம் ... | 8 | 0 | 0 | 11 | 8 | 0 |
| டிபாசிட் வட்டி வரவு ... | 4 | 7 | 6 | 4 | 7 | 6 |
| மொத்தம் ... | 43 | 2 | 6 | 1386 | 5 | 6 |
| ஆரம்ப இருப்பு ... | 23 | 12 | 9 | 74 | 8 | 6 |
| | 66 | 15 | 3 | 1460 | 14 | 0 |

### செலவு

| விவரம் | செப்டம்பர் மாதம் ரூ. | அ. | பை. | 1-12-1927 முதல் 30-9-1928 வரை ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கம் சேவிங்ஸ் பாங் ... | 28 | 7 | 6 | 638 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங் ... | ... | ... | ... | 82 | 4 | 0 |
| சித்தாந்தம் அச்சுக்கூலி காகிதம் உள்பட ... | ... | ... | ... | 422 | 0 | 0 |
| பிளாக்குகள் ரப்பர் ஸ்டாம்புகள் ... | ... | ... | ... | 12 | 8 | 0 |
| மீட்டிங் நோட்டீஸ், பிரவேச விண்ணப்பம் அச்சுக் கூலி ... | ... | ... | ... | 5 | 0 | 0 |
| வருடாந்தர மீட்டிங்கிற்கு அறிக்கை Etc., ... | ... | ... | ... | 73 | 8 | 0 |
| தபால் செலவு ... | 14 | 3 | 0 | 180 | 4 | 6 |
| கணக்குப் புஸ்தகம் பேனா முதலியன ... | ... | ... | ... | 8 | 9 | 0 |
| சில்லரைச் செலவு ... | 7 | 14 | 0 | 21 | 14 | 3 |
| மொத்தம் ... | 50 | 8 | 6 | 1444 | 7 | 3 |
| முடிவு கையிருப்பு ... | 16 | 6 | 9 | 16 | 6 | 9 |
| | 66 | 15 | 3 | 1460 | 14 | 0 |

### சமாஜத்தின் பொருள் வலிவு

| | | ரூ. | அ. | பை. |
|---|---|---|---|---|
| வேளாள ஐக்கிய நாணய சங்கத்தில் | ரூ. | 550 | 7 | 6 |
| தபாலாபீஸ் சேவிங்ஸ் பாங்கியில் | ,, | 25 | 4 | 0 |
| கையிருப்பு | ,, | 16 | 6 | 9 |
| மொத்தம் | ,, | 592 | 2 | 3 |

ம. பாலசுப்ரமணிய முதலியார், காரியதரிசி.

C. இரத்தின முதலியார், பொருட் காப்பாளர்.

வே. மாணிக்க முதலியார், கணிதபரிசோதகர்.

தமிழ் நாடெங்கணும் புகழ்வாய்ந்த எங்கள் நிகரிலாத

# அமிர்த குணபோதினி

பிரபல ஆசிரியர் ஸ்ரீமான் S. G. இராமாநுஜலு நாயுடு
அவர்களால் இப்பத்திரிகை எழுதப்பட்டு வருகிறது.

*அநுபவ ஞானபோதனையில் இதுபோன்ற முதன்மையான மாத சஞ்சிகை வேறில்லை. கௌரவமான விகடம் இப்பத்திரிகை யொன்றில்தான் காணலாம். இதுவே விவேகசாரம், இதுவே ஜக விநோதினி, இதுவே விசித்திர விலாஸம், இதுவே விகடப் பொக்கிஷம், இதுவே அநுபவஞானவாரிதி, இதுவே அற்புத ஞானபோதகம், இதுவே ஆச்சரிய சிந்தாமணி, இதுவே ஆநந்த தீபம் என்று எண்ணலாம். பதினாயிரம் சந்தா தாரர்களை உடையது. இன்னும் பல்லாயிரம் சந்தாதாரர்கள் தேவை. பார்க்க அழகாய், படிக்க இனிமையாய், நினைக்க மனோகரமா யிருப்பது எது? எங்கள் "அமிர்த குண போதினி"யே. 56-பக்கங்களுடன் ஒரே ரூபாயைச் சந்தாவாகக் கொண்டுள்ள உயரிய மாதப்பத்திரிகை தமிழ் நாட்டில் இது ஒன்றேதான். இதற்குச் சமமான தமிழ் மாதப் பத்திரிகை எதுவுமே கிடையாது. இது யாவரும் அறிந்த விஷயமே. வருஷ சந்தா ரூபாய் ஒன்றே. வெளிநாடு ரூ. 1—4—0. மாதிரி காப்பி இனாம்!*

1-9-28.
28-2-29.

தி. இராஜகோபால் முதலியார்,
அமிர்த குணபோதினி ஆபீஸ், 302, தங்கசாலை வீதி, சென்னை.

---

*ஆங்கிலேயம் படிக்க விரும்பும் அன்பர்களே! ஏன் கவலைப் படுகிறீர்கள்?*

உபாத்தியாயர் இல்லாமல்
60 நாளில் இங்கிலீஷ் கற்றுக்கொள்ளலாம்.
7,50,000 ஜனங்களால் வாசித்துப் பிரபல்யமடைந்த

# ஆங்கில ஆசான்

அல்லது

# ஆங்கில போதினி

**தமிழ் எழுத்துக்களை வாசித்தால்**
இங்கிலீஷ் பதங்கள் சுலபமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

இது 10-ம் பதிப்பு; 800 பக்கங்களுக்கு மேல் கொண்ட
ஒரு பெரிய புத்தகம்.

*உபாத்தியாயர் இல்லாமல் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக் கொள்ள உதவும் புத்தகம் இது ஒன்று தான். இது மாதர்களுக்கும், வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் முக்கியமானது. இப்பத்தாம் பதிப்பில் 1 அணாவிலிருந்து 3000 ரூபா வரையில் மிக சிரமப்பட்டு மாதச் சம்பளக் கணக்கு போடப்பட்டிருக்கிறது.*

**முழு கலிகோ பயிண்டு புத்தகம் 1-க்கு விலை ரூ. 2.**

*சமது லேடி டிரேட் மார்க்கைப் பார்த்து வாங்குங்கள்.*

**போலி புத்தகங்களால் ஏமாற வேண்டாம்.**




1-9-28.
28-2-29.

தி. இராஜகோபால் முதலியார்,
நெ. 302, தங்கசாலை தெரு, சென்னை

இந்தியாவில் சிறந்தது என்று அனுபவசாலிகளால் மதிக்கப்படும்.

**ருக்மணி குக்கர்** என்னும் சமையல் அடுக்கு உங்கள் வீட்டில் இருக்கிறதா? இல்லாவிட்டால் இன்றே ஒன்றைத் தருவியுங்கள்.

இதனால் ஒருமணி நேரத்தில் சாதத்துடன் பல பதார்த்தங்களை நீராவியினால், சிரமமில்லாமலும், சமையற்காரனுடைய உதவியில்லாமலும், மிகக் குறைந்த செலவில் தயார்செய்யக்கூடும்.

கனம் எட்டியாபுரம் ராஜா அவர்கள் எழுதுகிறார்:—மற்ற குக்கர்களை விட ருக்மணி குக்கரே பூரண திருப்தியைக் கொடுக்கிறதென உறுதியாய்ச் சொல்லுகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் அதிக சத்துள்ளதாயும், தேகத்திற்கு ஆரோக்கியத்தைக் கொடுப்பதாயும் இருப்பதோடு, மற்ற குக்கர்களில் காணப்படும் துர்வாசனை இல்லாததாயும் இருக்கிறது.

ஸ்ரீமான் டாக்டர் P. வரதராஜலு நாயுடு அவர்கள் எழுதுகிறார்:-நான் தங்கள் குக்கரை என்னுடைய வீட்டில் தினந்தோறும் சமையல் செய்வதற்கு உபயோகப்படுத்தி வருகிறேன். இதில் சமைக்கப்படும் ஆகாரம் மிகவும் நேர்த்தியான ருசியை அடைகிறது.

1, 2, 4, 6, 8 பேர்களுக்குத் தகுதியான குக்கர்கள் முறையே
13, 18, 22, 27, 33 ரூபா விலை.

ஒன்று இன்றே தருவியுங்கள். விவர புஸ்தகம் இனாம். ஏஜண்டுகள் தேவை.

1-7-28.
31-12-28.

**ருக்மணி குக்கர் கம்பனி,**
இராயபுரம், (11) மதராஸ்.



# மருத்துவன்

ஓர் உயர்ந்த வைத்திய மாதப் பத்திரிகை

பத்திராசிரியர் :—பண்டிட் S. S. ஆனந்தம் அவர்கள்

இம்மருத்துவன் ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாது வேண்டியவன். இவன் நோயணுகா விதிகளை ஆண், பெண் ஆகிய இருபாலருக்கும் போதிக்கக் கூடியவன். வந்த நோய்களை எளிதாகப் போக்கிக்கொள்ளும் வழிகளைக் கூறுபவன். பெண்கள் கருப்பெற்ற காலத்திலும், கரு உயிர்க்கும் காலத்திலும் நடந்து கொள்ளவேண்டிய முறைகளையும், பாலர் பரிபாலனத்தையும், குழந்தைகளுக்கு வரும் நோய்களையும், அவற்றிற்குரிய பரிகாரங்களையும் அறிவிப்பவன். பொதுவாக மக்கள் நோயின்றித் தேக பலத்தோடும், நீண்ட ஆயுளுடனும் வாழ்வதற்குரிய வழிகளை ஆராய்ச்சி முகத்தால் எடுத்து விளக்குபவன். மக்களுக்கு உயிரினும் சிறந்த பொருள் உலகில் வேறொன்றுமில்லையாதலால் ஒவ்வொருவருடைய உயிர் வாழ்க்கைக்கும் இம்மருத்துவன் உற்ற துணைவனாவான்.

மருத்துவனின் சந்தா விவரம்

ஆண்டு 1-க்குத் தபாற்கூலி யுள்பட உள் நாடாகிய இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 3—0—0.

1-11-28.
31-1-29.

மானேஜர், மருத்துவன் ஆபீஸ்,
221 தங்கசாலை தெரு, சென்னை.



Printed at the Sadhu Press, 12, Ganapathi Mudali Street, Royapettah. Edited and Published by Mani. Thirunavukkarasu Mudaliar for the Saiva Siddhanta Maha Samajam.